# தூண்டில்



Tamilische Zeitschrift des Südasienbüros

42

வானத்து வெண்மை பூமியில் படிவுகளாகி... ஒரு சூரியன் தெரியா மார்கழி மாதத்துக் குளிர் நாள். வெகு வேகமாக ஒருவன் வீதியைக் கடந்து பொலிஸ் நிலையத்திற்குள் நுழைகின்றான்.

"நான்கு நாட்களாக எனது நண்பனைக் காணவில்லை. அவனது அடையாள அட்டை மட்டும் தெருக்கரையோரம் கிடந்ததாய் தபாற் சேவகன் தந்தான்" எனச் சொல்லி அழுதான்.

பொலிஸார் பதிவேட்டில் பெயரைப் பதிந்தார்கள். அடையாள அட்டை பரிமாறப்பட்டது சமூக சேவை அலுவலகத்திற்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. வெகுசூட்சுமமாய் சமூகசேவை உதவிப் பணத்தை மீதப்படுத்த ஒரு வாய்ப்பு வந்துவிட்டதை உணர்ந்த அவர்கள் உதவிப் பணத்தை நிறுத்தினார்கள்.

நாய்கள், பூனைகள் தொலைந்துவிட்டால்கூட பக்கத்திற்கு பக்கம் தேடுங்கள், தேடுங்கள் என்று மனிதர்களை முடுக்கும் செய்திப் பத்திரிகைகள், வானொலிகள், வானொளிகள் வாயைமூடிக்கொண்டு "இந்த வெளிநாட்டகதி தொலைந்தால்தொலையட்டும்" என வேண்டாவெறுப்பாக ஒதுங்கிக்கொண்டன.

காடுகளிலும், மலைச்சாய்வுகளிலும், கடும் பனிக்குளிரிலும் சளைக்காத உலகின் தலைசிறந்த ஜேர்மானிய மோப்ப நாய்கள் இந்த ஈழத் தமிழனை தேடுவதற்கு முடுக்கிவிடப்படாமல் மூலையில் படுத்திருந்தன.

வட ஈராக்கிலே அகதியாகிப்போன குர்திஸ்தான் மனிதர்களுக்கு மருந்துகொண்டுபோவதாக உலகிற்குப் படம் பிடிக்கும் இந்த மாமனிதர்கள் தங்கள் நாட்டிலே, தங்கள் தயவை நாடிவந்து, உண்டு, உறங்கிய மனிதன் எங்கே போனான்? எப்படி போனான்? என்பதைக் காணவிருப்பமில்லாதவர்களாக கண் மூடியிருந்தார்கள்.

காலம் நீடித்தது. கருமை குறைந்து, வெண்மை கரைந்து, சூரியன் பளிச்சிட்ட நாட்கள். இலைவிட்ட மரங்கள் மீண்டும் துளிர் விட்ட நேரம்! சுமார் 3 மாத இடைவெளிக்குப் பின்னால் ஓர் நாள் நரிகளின் கூக்குரல், காக்கைகளின் பரபரப்பு... பாதையோரம் நடந்த மனிதர்கள் பரிதவித்துப் போனார்கள்.

ஓர் ஒதுக்குப்புற பாதையோர வடிகாலுள் மிதந்தது ஓர் ஈழத் தமிழனின் உடைபோட்ட எலும்புக்கூடு. கண்டு பிடிக்க வேண்டிய பொலிசாருக்கு கண்டவர்கள் செய்தி கொடுத்தார்கள். கூக்குரலோடு வரிசை வரிசையாய் பொலிஸ் வாகனங்கள் எலும்புக்கூட்டிற்கு உயிர் கொடுப்பதுபோல அவசர அவசரமாக அம்புலன்ஸ் வண்டிகள். பத்திரிகைகள் போட்டி போட்டெழுதின. வானொலி அவற்றையும் மிஞ்சியது. தற்கொலையென நிரூபிப்

Vimal raj.
Kamal
Amar raj

பதில் மரண விசாரணைகள் தீவி ரமாகின.

அந்த ஈழ அகதி விண்ணப் பதாரியின் எலும்புக்கூடு ஆடம்ப ரமில்லாமல் ஓர் நாள் காலை 7 மணிக்கு மண்ணுள் புதைக்கப் பட்டது. சோசல் வேலை என்ற பெயரில் மணித்தியாலம் 2மாக் வழங்கி காட்டு மரங்களை வெ ட்டி தோலை உரிப்பித்தவர்கள் அவனின் தோல் உரிந்த எலும்பு கூட்டை மண்ணுள் புதைத்தனர். அந்த மண்ணின் மேல் இன்று அவ னின் "தேவராசா சிவலிங்கம்" என்ற நாமச் சிலுவை!

நண்பனே !
இதமான பனிக்கட்டி — உன்
எலும்பை நருகும்!

நாய்களும், நரிகளும்...
உன் உடல் பிடுங்கும்!!

நீதிக் கண்களில்
கறுப்புத் துணிகள்.

விரலைச் சூப்பும் குழந்தைகள்
— கூட
விண்ணப்பதாரியாய்
பெயர்களில் மாற்றம்!
— இருந்தும்
தஞ்சவிண்ணப்பதாரி — நீ
ஏன்? சாவுவிண்ணப்பதாரியானாய்.

ஓ! நண்பனே...
இந்நாட்டு அகராதியில்
தஞ்சமென்பது
சாவு என்னும்
அர்த்தத்தில் தானோ?

# ஒரு அகதியின் மரணம்

<u>இறந்தவர் விபரம்</u>

பெயர் :- தேவராசா சிவலிங்கம்
இலங்கை வதிவிடம் :- கொட்டடி/யாழ்ப்பாணம்.
தஞ்ச வதிவிடம் : - Niederlosheim/Saarland.
காணாமற்போன நாள் :- 23.12.1990
கண்டெடுத்த திகதி :- 17.04.1991

*

ஈழம் ராஜி

---

# எலும்பின் ஓலம்

இப்போது
எங்கள் வீட்டின்
பின்புறக் குப்பையில்
காசித்தும்பை பூத்திருக்காதா?

அதற்கும் பின்னால்
குழிக் கக்கூசும்
கோழிகள் படுக்கும்
ஆலமரமும்
எப்டியிருக்கும்?

குழிக் கக்கூசும்
கோழிப்பீ மணமும்
இன்னும் என் மூக்கில் !

முற்றத்துத் தென்னம்பிள்ளை
பெரிதாக வளர்ந்துவிட்டதாக
வந்தவர்கள் சொன்னார்கள்.

எல்லாம் மாறியிருக்கும்.
நானும்தான் மாறிவிட்டேன்.

சிறுவனாய் ஓடித்திரிய
நான் இனிக் கொடுத்து வைக்கவில்லை.

வலையடிக்கவும், சூழ் கொளுத்தவும்
களவாய் இருட்டில்
கள் இறக்கவும்....
எதுவும் இல்லை.
மக்கள்தான்
இறந்தும் எஞ்சியும்
எங்கெங்கோ
அகதிகளாயினரே !

என்றோ ஒருநாள்
திரும்புவேன் என்று
நம்பியிருப்பாள் எனது அன்னை.
நானும்தான் நம்பியிருக்கிறேன்.

முதுமை தந்த வாலிபம்
ஓடி ஒளிந்துகொண்டது.

சூனிய வெளியில்
நானும் என் நாடும்.

நாடு திரும்புவேன் என்பதுமில்லை.
இங்கிருப்பேன் என்பதுமில்லை.
"இன்னொரு நாடு" அதுவுமில்லை.
கடந்தகால நிகழ்வுகள் மட்டும்
இன்னும் இருப்பாய்...
இருப்பின் இருப்பாய் !

பின்புறக் குப்பையில்
காசித்தும்பை பூத்திருக்காதா?
ஆலமரத்தின் உச்சியிற் கோழிகள்?
குழிக் கக்கூசும், கோழிப்பீ மணமும்
இன்னுமென் மூக்கில் !

*

ந. சுசீந்திரன்

# தொடரும்.... துயரம்....

"இனி நான் நாடு திரும்ப மாட்டேன்; வெளியேறும்படி நிர்பந்தித்தால் நான் கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொள்வேன்" - எலும்பும் தோலுமான 24 வயதான மகேஸ்வரி. தனது இரு குழந்தைகளுடன் 1990 ஆகஸ்ட் மாத மத்தியில் மண்டபம் முகாமுக்கு வந்த ஆயிரக்கணக்கான இலங்கை தமிழ் அகதிகளில் அவரும் ஒருவர். மன்னாருக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்.

சிங்கள ராணுவத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவரது உடல் நடுங்குகிறது. "அன்று நள்ளிரவில் திடீரென துப்பாக்கிச் சத்தம் கேட்டது. ஆறு ராணுவ லாரிகளில் சிங்கள ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே வந்தனர். குழந்தைகளை தூக்கிக் கொண்டு நாங்கள் காட்டை நோக்கி ஓடினோம். திடீரென வானிலிருந்து ஹெலிகாப்டர்கள் குண்டு வீசின. சிங்கள ராணுவத்தினர் எங்களை துரத்திக்கொண்டே சுட்டனர். எனது இளைய சகோதரன் என் கண் முன்னே துடிதுடித்து இறந்தான். இரு நாட்கள் பட்டினி கிடந்து கள்ளத் தோணியிலே இங்கு வந்து சேர்ந்தேன்" என்று பயபீதியுடன் விசும்பிக்கொண்டே அவர் கூறுகிறார்.

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையில் யார்தான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஈழத்தில் வாழ முடியும்? 1983 ஜூலை இனக்கலவரத்துக்குப் பிறகு 3 லட்சம் பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளனர். பாசிச ராஜீவின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிறகு பாதிக்கும் மேற்பட்ட அகதிகள் நாடு திரும்பிவிட்டதாக அரசு கணக்கு காட்டியது. ஆனால், இந்த துரோக ஒப்பந்தம் கழிப்பறைக் காகிதமாகி, 1990ல் சிங்கள அரசு பயங்கரவாதிகள், புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் சிவிலியன்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ஏவத் தொடங்கியதும், இந்தியாவுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை 4 மடங்காக அதிகரித்தது. உத்தேச மதிப்பீட்டின்படி ஏறத்தாழ இரண்டரை லட்சம் தமிழ் அகதிகள் இப்போது இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

இவர்களில் 1,20,000 பேர் அரசு ஏற்பாடு செய்துள்ள அகதி முகாம்களிலும், மற்றவர்கள் தமது சொந்தப் பொறுப்பிலுமாக பல்வேறு இடர்பாடுகளுக்கு நடுவே வாழ்க்கையைத் தள்ளுகின்றனர். தமிழகத்திலுள்ள 243 முகாம்களில் அரசின் நிவாரண உதவிக்காக கையேந்தி நிற்கும் தமிழ் அகதிகளின் நிலைமை சோகத்திலும் துயரமானதாக உள்ளது.

சிமெண்ட் தகடுகளைக் கொண்ட கூரைக் கொட்டகை; குடிநீர், சாக்கடை, கழிப்பறை வசதிகளற்ற இருப்பிடம்; மருத்துவ வசதிகள் மருந்துக்குக்கூட கிடையாது;

மாதத்திற்கு 150 ரூபாய் நிவாரணத் தொகை; மானிய விலையில் வழங்கப்படும் புழுத்துப் போன அரிசி — இந்த அற்ப நிவாரணத் தைக் கொண்டுதான் அவர்கள் வாழ வேண் டும்.

சிறிய பெட்டி போன்ற சிமெண்ட் தகடு களைக் கொண்ட வீடு; அதில் பெண்களுக்கு மறைவிட வசதி ஏதும் கிடையாது. கோடை காலத்தில் இந்த வீடுகளில் ஒரு நிமிடம் கூட நிற்க முடியாது. ஆஸ்பஸ்டாஸ் கூரைக ளைக் கொண்ட இந்த வீடுகள் செங்கற் சூளையிலிருப்பதைப் போல அனலைக் கக் கும். "பெரியவர்கள் எப்படியாவது சமா ளிக்கலாம்; ஆனால், கைக்குழந்தைகளை வைத்துக்கொண்டு நாங்கள் படும் அவதி யைச் சொல்லி மாளாது. எங்கள் குழந்தைக ளில் பலருக்கு கடந்த ஆண்டில் அம்மை நோய் தாக்கியது. எந்த மருத்துவ வசதியும் எங்களுக்கு கிடைக்கவில்லை" என்கிறார், தென்னாற்காடு மாவட்டம் கனகராம்பட்டு கிராமத்திலுள்ள அகதி முகாமில் வசிக்கும் ஒரு தாய்.

"எங்களுக்கு முன்னைப் போல நிவார ணத் தொகையும் ரேஷன் பொருட்களும் உரிய காலத்தில் கிடைப்பதில்லை. ஒரு மாதத்துக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் தருகிறார்கள். அதைக்கொண்டு எப்படி நாங்கள் சமைக்க முடியும்? பல மைல்தூரம் அலைந்து விறகு பொறுக்கி வந்து எப்ப டியோ சமாளிக்கிறோம். மழைக் காலங்க ளில் எங்கள் பாடு திண்டாட்டம்தான்" என்று வேதனையுடன் கூறுகிறார் அனிச்சன் குப்பம் கிராமத்திலுள்ள முகாமைச் சேர்ந்த தெரசம்மா எனும் மூதாட்டி.

தமிழகத்திலுள்ள அகதி நிவாரண முகாம்களிலேயே கனகராம்பட்டிலுள்ள முகாம்தான் மிக மோசமான நிலையில் உள் ளது. சிதம்பரத்திலிந்து 7 கி.மீ. தொலைவி லுள்ள இந்த முகாமில் குடிநீர் வசதி அறவே கிடையாது. பெண்களுக்கு மறைவிடமோ குளியலறையோ அங்கு இல்லை. இதுவரை எந்த மருத்துவ வசதியும் அவர்களுக்கு செய்துதரப்படவில்லை.

கனராம்பட்டிலுள்ள பொது சமையற் கூட கொட்டகை இற்றுவிழும் நிலையில் உள்ளது. மழைக்காலத்தில் அவர்கள் எங்கே சமைப்பார்கள் என்றே புரியவில்லை. "நாங் கள் தினமும் ஆற்றைக் கடந்து 5 கி.மீ. தொலைவுக்குச் சென்று விறகு பொறுக்கி வந்து சமைக்கிறோம். மழைக்காலத்திற்காக கொஞ்சம் விறகை சேமித்து வைக்க இங்கு வசதி ஏதுமில்லை. ஆண்டவன் தான் எங்க ளைக் காப்பாற்ற வேண்டும்" என்கிறார் வள்ளியம்மை எனும் தாய்.

இதர அகதி முகாம்களும் ஏறத்தாழ இதே நிலையில்தான் உள்ளன.

எந்த உதவியும் அரசிட மிருந்தோ, இதர அமைப்புகளிடமிருந்தோ கிடைப்பதில்லை. பிழைப்புக்கான வேலை வாய்ப்பு அகதிகளுக்கு அறவே இல்லை. அனிச்சன் குப்பத்திலுள்ள பெண்கள் தையல் வேலைகளைச் செய்து ஓரளவு வரு வாய் ஈட்டுகின்றனர். மரக்காணம் அருகி லுள்ள தோணிமேடு முகாமிலுள்ள மீனவர் கள் அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்களுடன் சேர்ந்து கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். சில இளைஞர்கள் பல்பொடி தயாரித்து விற் பது, ஐஸ்கிரீம் தயாரிப்பது, முகாமிலேயே பெட்டிக்கடைகள் வைப்பது முதலான தொழில்களில் ஈடுபடுகின்றனர். மற்றபடி பெரும்பாலான மக்களுக்கு வேலை கிடைப் பதில்லை.

எல்லாவற்றையும்விட, சிங்கள இனவெறி ராணுவத்திடமிருந்து தப்பிவந்த ஈழத்தமிழ் பெண்களில் சிலர் இந்திய போலீசால் நான் காண்டுகளுக்கு முன்பு கற்பழிக்கப்பட்டனா கடலூரிலும் தூத்துக்குடியிலும் ஆலைகளில் வேலை தருவதாகச் சொல்லி பல ஈழ அகதி கள் சுரண்டப்பட்டு வீதியிலே வீசியெறியப் பட்டனர். வேலூரில் ஒரு ஈழ இளைஞரின் சிறுநீரகம் ஒரு போலீசுக்காரருக்காகத் திரு டப்பட்டது. அரசின் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்காக பல ஈழ அகதிகள் கட்டாய

அறுவை சிகிச்சைக்கு இழுத்துச் செல்லப்படு கின்றனர். நொந்த மாட்டை காக்கை கொத்து வது போல இந்தியாவில் ஈழத் தமிழ் அகதி கள் இப்படி பல வழிகளிலும் துன்புறுத்தப்ப டுகிறார்கள்.

ஈழத் தமிழர்களின் அவல நிலை பற்றி நீலிக் கண்ணீர் வடித்த கருணாநிதி அரசு ஆட்சிக்கு வந்த புதிதில் சில ஆரம்ப சூரத்த னங்களைக் காட்டியதே தவிர, அதன்பிறகு ஈழ அகதிகளைப் பற்றி வாய் திறக்கவே யில்லை. தமிழக மக்களுக்கு ஒழுங்காக ரேஷனில் உணவுப் பொருட்களை வழங்க வக்கற்ற கருணாநிதி அரசு, அகதிகளுக்கு மட்டும் முறையாக வழங்கிவிடுமா என்ன? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, அகதிகளுக்கு வழங்கப்பட்ட தரமான அரிசி பின்னர் புழுத்த அரிசியாகிறது. இப்போது கவர்னர் ஆட்சியில் அதுவும் கூட முறை யாக வழங்கப்படுவதில்லை.

'வந்தாரை வாழவைக்கும் பண்பாடு மிக்க' தமிழகத்தில் இன்று ஈழத் தமிழ் அகதி கள் மூன்றாந்தர குடிமக்களாக வதைகின்ற னர். கடந்த ஆண்டில் அகதிகள் தமிழகத் துக்கு வந்து குவிந்தபோது, நிவாரண முகாம்களுக்குச் சென்று ஆறுதல்கூறி ஆதா யமடைந்த ஓட்டுப்பொறுக்கிகளும், ஈழ ஆதரவு இயக்கப் பிழைப்புவாதிகளும் அதன்பிறகு அவர்களை ஏறெடுத்தும் பார்க் கவில்லை.

குறிப்பாக சோ,ஜெயலலிதா - வாழப் பாடி - தா.பாண்டியன் கும்பல், புலிகளின் நடவடிக்கைகளைக் காட்டி ஈழ விடுதலை யையே எதிர்த்து, தார்மீக உதவிகள் செய்வ தைக்கூட தேச விரோதச் செயலாக சித்தரிக் கிறது. ஈழ ஆதரவு இயக்கத்தினரை பிரி வினை வாதிகளாகச் சித்தரித்து கடுமையாக எதிர்க்கிறது. பாசிச ராஜீவ் - சந்திர சேகர் கும்பல் இன்னும் ஒருபடி மேலே போய் புலிகளுக்கு கருணாநிதி அரசு உதவுவதாகக் கூறி அதைக் கலைத்ததோடு, போரில் சிக்கி யுள்ள ஈழ மக்களுக்கு எந்த உதவியும் நேரடி யாகவோ மறைமுகமாகவோ கிடைக்காத படி தடுத்து தமிழக கடற்கரைப் பகுதிகளில் காவற்படைகளை நிறுத்தியுள்ளது. இதன் மூலம் ஈழ விடுதலை இயக்கங்களை சுற்றிவ ளைத்து நசுக்க சிங்கள பேரினவாத அரசுக்கு



இந்தியா உதவியுள்ளது. மேலும் அகதிகள் பெருமளவில் குவிவதால் ஏற்படும் சுமையைக் காட்டி இலங்கையிலேயே அகதிகள் முகாம் அமைக்க ஆலோசித்து வருகிறது. இந்திய - ஈழத் துரோகிகளின் உதவியுடன் தமிழ் அகதிகளை மீண்டும் சிங்கள இன வெறியர்களின் பிடியில் ஒப்படைக்கும் ஏற்பாடுதான் இது.

ஈழ விடுதலையை ஆதரிக்கும் எந்த ஒரு அமைப்பும் தனி நபர்களும் ஈழ அகதிகள் இங்கே வதைப்படுவதைக் கண்டு வாளாவிருக்க முடியாது. ஈழ அகதிகளின் நல்வாழ்வு - நிவாரணத்துக்காக மட்டுமின்றி, இந்திய - இலங்கை ஆதிக்க வெறியர்களின் கூட்டுச் சதிகளுக்கு எதிராகவும் போராட வேண்டியது இன்றைய அவசர அவசியக் கடமையாக உள்ளது.

மறுபுறம், ஈழ அகதிகளை அரசியல் ரீதியில் பயிற்றுவித்து இந்திய - இலங்கை ஆதிக்க வெறியர்களின் சதிகளை அம்பலப் படுத்த எந்த ஒரு ஈழ விடுதலை போராளிகள் அமைப்பும் தயாராக இல்லை. அகதிகளின் அவல நிலை பற்றி கண்ணீர் வடிப்பதிலும், அற்ப உதவிகளைச் செய்து அவற்றைப் பெருமையாகப் பீற்றிக்கொள்வதிலுமே அவர்கள் குறியாக உள்ளனர்.

"என்ன இருந்தாலும் இலங்கை எமது தாய்நாடு. நாங்கள் பிறந்து வளர்ந்து பல்கிப் பெருகிய பூமி. காலம் ஒரு நாள் மாறும். அப்போது மகிழ்வுடன் எங்கள் தாயகத்துக்குத். திரும்புவோம்" என்று நம்பிக்கையோடு கூறுகின்றனர் இங்குள்ள அகதிகள். ஈழஅகதிகளை அரசியல்படுத்தாமல் இதே நிலையில் இருத்தி வைத்திருந்தால் நாளை அவர்களின் நம்பிக்கை பொய்த்துப் போவதோடு, இந்திய - இலங்கை ஆதிக்க வெறியர்கள் மற்றும் ஈழத் துரோகிகளின் சதிகளுக்கு அவர்கள் இரையாக நேரிடும். அது ஈழ அகதிகளை பழிவாங்குவதுடன் ஈழ விடுதலையையும் காவு கொள்வதாகிவிடும்.

(நன்றி: "புதிய ஜனநாயகம்") ● குமார்

## உடலுறுப்புகள் கொள்ளை!!!

"எங்கள் நாட்டு இளம் பெண்கள் அகதி முகாம்களில் சீவிப்பது மிகவும் கஷ்டம். 'காட்டுக்குப்போன இலங்கைக் கன்னி கற்பழிப்பு', 'இரவில் சினிமாவுக்குச் சென்ற பெண்கள் திரும்பவில்லை'... இப்படியெல்லாம் பத்திரிகையில் நிறையச் செய்திகள் வருகின்றன. இவை பொய்யல்ல.

சுகமில்லையென ஆஸ்பத்திரிக்குச் சென்றால் ஒப்பிறேசன் என்று கூறித் தியேட்டருக்குகொண்டுபோய் அங்கேயே சிறுநீரகத்தை எடுத்துவிட்டு தைத்து விடுவார்கள். இப்படி எடுக்கப்படும் சிறுநீரகங்கள் ஒன்று 30ஆயிரம் ரூபாவரை விற்பனையாகின்றன. இச் சிறுநீரகக் களவு டொக்ரர்களின் உடந்தையோடு தான் நடக்கிறது. இது பற்றி யாரோடு போராடுவது..? எல்லாமே இலஞ்சம்தான்.

மண்டபம் முகாமில் ஒரு அகதி இறந்துபோனார். அவரது பிள்ளைகள் இறப்புப் பத்திரத்தை ஆராயந்தபோது இறந்தவரின் சிறுநீரகம் 'எடுக்கப்பட்டது' தெரியவந்துள்ளது.

இப்படி எத்தனை கொடுமைகள்..."

(ஜேர்மெனியிலிருக்கும் நண்பருக்கு இந்தியாவிலிருந்து வந்த கடிதத்திலிருந்து..)

# விடியும்வரை காத்திரு

உள் முரண்பாடுகளினால் உடைந்துபோன ஒரு கழகத்தின் தோழர்களை அம்மான் வெளிநாட்டில் சந்திக்கிறார்.

அம்மான்: என்ன தோழர்! வவுனியாவிலை உங்கட ஆக்கள் இலங்கை ஆமியோடை சேர்ந்து அந்த மாதிரி அடிக்கினம் போல. அரசாங்கத்தோட நீங்கள் சேர்ந்தது பழைய விடயம்தான். ஆனால் நின்றுபோராடுற இயக்கத்தைப் பிடிக்கிறோம் எண்டு சொல்லி மக்களை அழிப்பதற்கு உடந்தையாக இருப்பது எந்தளவிற்கு நியாயமானது? இதை மனிதாபிமானமுள்ள எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தோழர் 1: மனிதாபிமானம்! இந்தச்சொல்லை மிகவும் இலகுவாக உம்மைப் போன்றவர்கள் சொல்லிவிட்டுப் போய்விடுவீர்கள். இந்தியப்படையின் உதவியுடன் மட்டுநகரில் பேச்சுவார்த்தைக்கென அழைத்து எமது முன்னணித் தோழர்களை வஞ்சகமாகக் — கொலைசெய்த போதும், முள்ளிகுள முகாமையும், அங்கேயிருந்தவர்களையும் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் நிர்மூலமாக்கியபோதும், இன்னும் பல போராளிகளைத் தனித் தனியாகக் கொலை செய்தபோதும் நீர் எங்கேயிருந்தீர்? அவர்கள் எத்தனை பேரின் குடும்பங்களையே அழித்தார்கள். அவர்கள் நின்று போராடுபவர்கள் என்று தூக்கிப் பிடித்துக்கொண்டு ஏதோ பெரிதாக மனிதாபிமானத்தைப் பற்றி இப்போது கதைக்க வந்துவிட்டீர்.

தோழர் 2: எங்கள் கழகத் தோழர்களை, ஏனைய இயக்க அங்கத்தவர்களை கொன்றும், மீளமுடியாத சிறையில் அடைத்தும் தமது அராஜகக் கரங்களை ஆழப் பதித்துள்ள அவர்களை இல்லாமற் செய்கின்ற இந்த நடவடிக்கையில் மக்களின் இழப்புகள் தவிர்க்கமுடியாதவை. இதுவரை காலமும் நடந்ததை ஓர்தடவை நினைத்துப் பாரும் அம்மான்.... அத்தனை இயக்கங்களும் அழிக்கப்பட்டன. வசதியானோர் எங்கெங்கு ஓடமுடியுமோ அங்கங்கு ஓடித்தப்பிய— பின் நாட்டிலே எஞ்சியுள்ள கழக இளைஞர்களின் நிலைமைக்குத் தீர்வுதான் என்ன? அவர்களின்

உயிருக்கு யார்தான் உத்தர வாதம்? இங்கே இருந்துகொண்டு அது பிழை, இது சரி எனக்கதைப்பது எவ்வளவோ சுகமானது-தான். எமக்கு மக்களின் உயிர் அழிவைவிட நின்று போராடுபவர்கள் என்று நீர் தூக்கிப் பிடிப்பவர்களை அழிப்பதுதான் முக்கியமானது.

தோழர் 3: அவர்களிடமிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளதான் இலங்கையரசுடன் இணைந்துள்ளோம். பிறகு அரசிடமிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள யாருடன் இணைவது என்பதுபற்றி எமது தலைமை இன்னும் முடிவு எடுக்கவில்லை. அன்று அவர்கள் மனைவிமார் சகிதம் இலங்கைப் பொலிஸ், இராணுவ வாகனங்களில் பவனிவந்தபோது அதைச் சாணக்கியம், யுத்த தந்திரம் எனப் பெருமைப்பட்டீரோ என்னவோ! தமிழ்மக்களை குண்டு வீசியழித்த அரச விமானங்களிலும், ஹெலிகளிலும் அவர்கள் பறந்து திரிந்ததை அதற்குள் மறந்து போனீரா? அவர்கள் அனுபவித்ததை நாம் ஏன் அனுபவிக்க கூடாது? அரச வாகனங்கள் எல்லோருக்கும் பொதுதான்.

தோழர் 4: இன்றைய போர் யாருடைய நலன்களுக்காக நடத்தப்படுகிறது? முழுத் தமிழ்ப் பிரதேசமும் அகதி முகாமாக. உயிருடைமைகளின் அழிவு ஒருபுறம். உயிர்வாழ்வோர் உணவுக்காக கையேந்தித் திரியும் நிலை மறுபுறம். அங்கே வாழ்வதற்கான போராட்டம் நடக்கிறது. அங்கு யார் வாழவேண்டும்? மனிதர்கள்தான். மற்றவை அழிக்கப்படவேண்டும்.

அம்மான்: தோழர் கொஞ்சம் பொறுங்கோ! மக்களுடைய முதலாவது எதிரி இலங்கை அரசேயொழிய அவங்களில்லை. உங்கடை கதையைப் பாத்தால் அவங்கள் அழிஞ்சால் எல்லாம் சரியெண்டமாதிரியெல்லோ இருக்குது. அவங்கள் மற்ற இயக்க ஆக்களை

ஊனாவும், மோனாவும்.

"பெரிய தலைவர்மார் செத்தா அடிச்சுப் பிடிச்சுக்கொண்டு எல்லாரும் கண்டனமும், கண்ணீர் அஞ்சலியும் செய்யிறதேன்? இவை பொதுசனங்களிலை இவ்வளவு அக்கறை காட்டுறயில்லையே?"

"இந்தத் தலைவர்மாராலை தங்களுக்கு கிடைச்ச இலாபம் பறிபோனதாலை வந்த கோவமும், கவலையும்தான் காரணம். ஒவ்வொருதற்றை அறிக்கையையும் வாசிச்சா தெரியும் என்ன நோக்கத்-தோடை இவை இருந்திருக்கினம் எண்டது"



சிறையிலை அடைக்கிறாங்கள் . கொல்லுறாங்கள் எண்டு புராணம் பாடுறியளே. ஏன் உங்கடை கழகம் உங்கடை தோழர்களையே சிறையிலை அடைச்சு சித்திரவதை செய்யேலையா? கண்ட துண்டமாக வெட்டி கடலிலே போடவில்லையா? அவங்கடை இயக்கச் சின்னப்பெடியளை சுழிபுரத்திலை புதைக்கையில்லையா? இவ்வளவுக்கும் தலைமைதாங்கின செயலதிபற்றை படம் போட்ட கலண்டரை இப்ப கொண்டு திரிஞ்சு விக்கிறியள். உங்களுக்குள்ளேயே கொலைவெறியும், முரண்பாடுகளும் இருக்கேக்கை ஏன் தோழர் மற்றதுகளைப் பற்றிக் குற்றச்சாட்டுகள்?

தோழர் 1: எங்களையும், மற்றவர்களையும் கூட்டுச் சேர்த்து எல்லாவற்றையும் பங்கு போட அவர்கள் தயாரில்லை. எல்லாம் தமக்கு மட்டும்தான் என்று அவர்கள் அழுங்குப்பிடியாக நிற்பது தான் எமது கோபத்திற்கு காரணம். அன்று இலங்கை, இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது என்ன சொன்னார்கள்? பின்னர் தமிழீழப்போர் என்று சொல்லி இந்திய இராணுவத்துடன் சண்டை போட்டார்கள். இப்போது சண்டை பிடித்ததற்காக கவலைப் படுவதாகச் சொல்லுகிறார்கள். இலங்கை அரசாங்கத்தோடு — ஒரு வருடத்திற்கு மேலாகப் பேச்சுவார்த்தை நடத்தியபோது தமிழ்மக்களின் பிரச்சினைக்கு என்ன தீர்வு வைத்தார்கள் என்பதோ அதில் அரசு எதைக் கொடுக்க மறுத்தது என்பதோ யாருக்காவது தெரிவிக்கப்பட்டதா? அந்த ஒரு வருட காலத்தில் அவர்களுக்கும், அரசுக்குமிடையே இருந்த அன்னியோன்னியத்தை என்னென்று சொல்வது? சாதாரணவாழ்வின் இயல்புகளை வெல்லமுடியாத சிந்தனைகள் இருக்கும்வரை பொது எதிரி, முதல் எதிரி, கடைசி எதிரி என கனவுக் கதைகள் தொடர்தல் தவிர்க்கமுடியாததுதான்.

தோழர் 2: எமது கழகம் உள்ளுக்குள்ளேயே சித்திரவதைகளை செய்தபடியால்தான் உடைவுகள் ஏற்பட்டது. மக்களிலிருந்தும் அந்நியப்பட்டது. அந்தத் தவறுகளினூடாக சித்திரவதைகள், கொலைகளை வேறு எப்படிச் செய்யலாம் என்று கற்று திருத்தியமைக்கப்பட்டதுதான் இன்றைய எமது புதுக் கழகம். நாங்கள் அந்நியமாக்கப்பட்டபோது மக்கள் ஓரளவு உரிமைகளுடனிருந்தார்கள். ஆனால் இன்றோ அவர்களின் அடிப்படை உரிமைகளே நின்று போராடுபவர்கள் என்று உம்மால் சொல்லப்படுபவர்களால் பறிக்கப்பட்டும், மறுக்கப்பட்டும்விட்டன. அதனால் தான் நாங்கள் நடவடிக்கையெடுத்துள்ளோம்.

தோழர் 5: நூறு கொலைகள்தான் நாங்கள் செய்திருப்போம். இதைப்போய் எல்லோரும் பெரிதுபடுத்துகிறீர்களே . அவர்கள் செய்த கொலைகள்

எத்தனை? மேலும் மாலைதீவுவரை புரட்சி செய்யக்கூடியவகையில் நாம் வளர்ந்திருக்கிறோம் என்பதை நீர் கவனத்தில் கொள்ளவேண்டும். கலண்டரிலுள்ள படத்தைப் பற்றியும் கொச்சைப்படுத்திப் பேசினீர். கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களின் படங்கள்தான் இன்றும் கலண்டர்களாக வந்துகொண்டிருக்கின்றன. இந்த மரபை நாம் மீறலாமா? மறைந்த பெரியைய்யாவின் படத்தைப் போடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே நாங்கள் செய்த பாக்கியம்.

அம்மான்: என்ன தோழர் பெரியைய்யாவை இலேசிலை விடமாட்டீங்கள்போல. . என்ன கேள்வி கேட்டாலும் அதுக்கு நேர மறுமொழி சொல்லாம அவங்களை குற்றம் சொல்லுறதிலை கொண்டு வந்து முடிச்சுப்போடுங்கோ. உங்கடை புதுத்தலைவர் ஜெனிவாவுக்கு இலங்கையரசின் பிரதிநிதியாய் வந்து இலங்கையில மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகுது எண்டு பேசிப்போட்டுப் போன பச்சைத் துரோகத்தை நான் இன்னும் மறக்கேலை. கொலைகாரன் ரஞ்சன் விஜயரத்தினாவின்ரை செத்தவீட்டில உங்கடை தலைவர்மார் சமாதானத்தூதுவர், அமைதிப்புறா எண்டு கண்ணீர் வடிச்சதையும் நான் அறிவேன். அவங்களிலை பிழையிருந்தாலும் அரசை அவங்கள் எதிர்க்கிறாங்கள். நீங்கள் அரசாங்கத்தோடை சேர்ந்துநின்றுகொண்டு மக்களுக்காகப் போராடுகிறோம் எண்டு யாரை ஏமாத்துறியள். அதுதான் உங்கட குழுவைப் பற்றி முன்னமேயே சொல்லிப்போட்டாங்கள் விடியும் வரை காத்திரு எண்டு. விடியும் எண்ட சொல்லுக்கும் உங்கடை கழகத்துக்கும் என்ன சம்பந்தம் என்றது எனக்கு இன்றைவரை விளங்கவேயில்லை.

தோழர் 3: எம்முடைய நிலைக்கு கருத்து ரீதியாக வளர்ந்திருப்பீர் என நினைத்துத்தான் உம்முடைய கேள்விகளுக்கு ஆழமாக பதிலளித்தோம். ஆனால் நீர் அடிப்படை அரசியல் அறிவே இல்லாதவர் என்பது இப்போதுதான் தெரிகிறது. நீர் சிலவேளை அவர்களின் ஆதரவாளராக இருக்கலாம். வடக்கு, கிழக்கில் நாம் மேற்கொண்டுள்ள பணிகள் மிகவும் கடுமையானவை. நிரந்தரத் தீர்வின் அவசியம் குறித்து அரசுடன் மாத்திரமல்ல, தென்னிலங்கை பெரும்பான்மை இனக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறோம். பாதிப்புற்றிருக்கும் மக்களின் அவல நிலை குறித்து அரசுக்கு தெளிவுபடுத்தவும், அம் மக்களுக்கான உடனடித் தேவைகளைப் பெற்று கொடுக்கவும் அரசைக் கேட்டு வருகிறோம்.

தோழர் 5: விடியும்வரை காத்திரு எனவும், பின்னர் விடிவுக்கும் எமக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது எனவும் நீர் கூறியது

கழக விசுவாசமுள்ள எவருக்கும் கோபத்தைத்தான் வரவழைக்கும். உம்மை மன்னித்துவிடலாம். ஆனால் அவங்களை.....

அம்மான்: மக்களுக்காண்டி அரசோட கதைக்கிறியளோ? தோழர் இதுக்கு மேலை உங்கடை கதையை நான் கேட்கத் தயாரில்லை. அண்டைக்கும் ஜேமன் ரி.வி.யில போட்டுக் காட்டினவங்கள். தாண்டிக்குளத்தை தாண்டி சாப்பாடு தேடிவந்த சனங்களை உங்கடை கழகப் பெடியள் நாய் கலைக்கிறமாதிரி அடிச்சுக்கலைக்கிற கொடுமையை நானும் பாத்தனான். பிறகு கேள்விப்பட்டன் வந்த சனத்திலை மூண்டு பேரை சுட்டும் கொன்றுபோட்டியளெண்டு. அங்காலை அவங்களின்ரை பிடியிலை இருந்து தப்பி வந்தா இங்காலை நீங்கள்.

தோழர் 1: உமக்கு அரசியல் தெரியாது. வவுனியா எங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறதென்று வேறு எப்படி நாங்கள் நிருபிப்பது? மக்களை வைத்துத்தானே எல்லாம் செய்து காட்டலாம். மூன்று சனம் செத்தது அவ்வளவு பெரிய இழப்பில்லை. அவங்கள் எவ்வளவு பேரைக் கொன்றார்கள் என.

....

அம்மான்: வாயைத் திறந்தால் அவங்களைப் பற்றித்தான். உங்களைப் — போராட வேண்டாமெண்டு அவங்களா சொன்னவங்கள்? போராளிகளை நீங்களே கொன்றொழிச்சபடியால்தானே கழகம் உடைஞ்சு போனது. போராட்டம் எண்டு பணம் சேர்த்து தலைவர்மாரே அதைத் தங்கடை பொக்கற்றுக்களுக்கபோட்டு போராளிகளை பட்டினி கிடக்கவிட, ஆயுதங்களுமில்லாமல் நம்பிக்கை வைச்ச சனங்களையும் பேய்க்காட்டி... எல்லாத்தையும் உங்கடை பெரியைய்யா தலைமைதானே செய்தது. இப்ப அவற்றை பேரைத் திரும்பவும் சொல்லிக்கொண்டு எங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கின இலங்கை அரசாங்கத்தோடை கைகோர்த்து தாக்குதல்களும் நடத்திக்கொண்டு அவங்கள்தான் எதிரி எண்ட மாதிரி கதைச்சுக்கொண்டிருக்கிறியள். ஆற்றை காதுக்குப் பூ சுத்துறியள்..?

தோழர் 4: நாங்கள் யாருக்கும் பூச் சுத்தவில்லை. யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள மறுப்பவர்கள் என்றோ ஒருநாள் எமது செயற்பாடுகளையும் புரிந்துகொள்வர் என்ற நம்பிக்கையுடன் எத்தகைய விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளோம். அவங்களை எப்பிடி அழிப்பது, மக்களை எப்படி பாவிப்பது என்ற எமது இலக்கிலும், பாதையிலும் நாம் மிகவும் தெளிவாகவும், உறுதியாகவுமுள்ளோம்.

அம்மான்: இவ்வளவு நேரமும் கதைச்சதிலை அரசைப் பற்றி நீங்கள் ஒரு குறையும் சொல்லவேயில்லை. நீங்கள் ஆர் எண்டது இதிலையே விளங்குது. உங்கடை கதையளைக் கேட்க நல்லாத்தானிருக்கு. இன்னும் எத்தனை நாளுக்குத்தான் இந்த அந்நிய தேசங்களிலை அகதிகளாய் உங்கள் எல்லாற்றையும் கதையையும் - கேட்டுக்கொண்டும், உங்கடை நோட்டீசுகளைப் பார்த்து பைத்தியம் பிடிக்காமலும் இருப்பது? நாட்டிலை இருக்கிற மக்கள் உங்கள் எல்லோரிடமிருந்தும் எப்போது விடுதலை கிடைக்கும் என்றுதான் காத்திருக்கிறார்கள்.

தோழர் 4: காலம் ஒன்று நிச்சயம் கனியும். உம்மைப் போன்றவர்களின் நகைப்புகளும் அடங்கும். அனைத்து அடக்குமுறைகளும் அரைத்து எறியப்படும். அந்தக் காலம் வரும்வரை அனைவரும் காத்திருக்கத்தான் வேண்டும்.

தோழர் 5: மேற்கொண்டு பதில் சொல்ல இயலாது. அதனால் நீர் போய்வரலாம்.

அம்மான்: (நல்லகாலம்) நன்றி மிக்க நன்றி தோழர்களே!!!

அ.வே. சுப்பையா



# நூல் அறிமுகம்




விற்பனை:

N.C.B.H
41-B, Sidco industrial Estate
Madras - 98
India

இந்திய இராணுவம் வடகிழக்குப் பகுதிகளிலிருந்து வெளியேறிய பின்பு சிறிதுகாலம் தமிழ்ப் பகுதிகளின் நிலவிய அமைதி 1990 யூன் மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் சில பொலிஸ் நிலையங்களைப் புலிகள் தாக்கியதுடன் முடிவுக்கு வந்தது. இதற்கு முன்னைய போர்களைவிட இப் போரானது மிகவும் உக்கிரமாகவும் அதிக உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியவாறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விடுதலைப்புலிகளும், அரச படையினரும் தமிழ் மக்களது உயிர்களைப்பற்றி எதுவித அக்கறையுமின்றித் தத்தமது போக்கில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இப் போரில் இலங்கை அரச படைகளின் படுகொலைகளும், ஒடுக்குமுறைகளும் ஆயிரக்கணக்கான சிறுவர்களையும் பெண்களையும் புலிகளின் பக்கம் தள்ளியுள்ளது. விடுதலைப் புலிகளும் இப் போரானது இறுதிப் போர் எனக் கூறிவருகின்றனர். சில அரைகுறை மாக்சிஸ்டுகள் இந்த யுத்தத்தை தடுப்பு யுத்தம் எனக் கூறிவருகின்றனர். ஈழப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் கிழக்கு மாகாணமும் முக்கியமானது. தற்போதும் கிழக்கு மாகாண மக்கள் எதுவித பாதுகாப்புமின்றி அரச படைகளின் முன் தனித்து விடப்பட்டுள்ளனர். மக்களுக்கான சுயாதீன அமைப்புக்கள் கூட புலிகளினால் முற்றாக நசுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இந்த மக்கள் ஸ்தாபனங்கள் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. இந்நிலையில் தமது ஆயுதம் மட்டுமே பாதுகாப்பு என்னும் நிலைமைக்குள் விடுதலைப்புலிகள் தமிழ்மக்களை தொடர்ந்து வைத்துள்ளனர். மக்கள் சார்பு சுயாதீன குழுக்கள் முடமாக்கப்பட்டு உள்ளமையினால் இராணுவ வெறியாட்டத்தின் போது மக்களுக்காக, இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவோ அல்லது வேறு வழிகள் மூலமாக மக்களைப் பாதுகாக்க முடியாமல் போவதால் இராணுவம்


# இன்றைய யுத்தம் :

## அழிவுஅரசியலின் விபரீதவிளைவா? தடுப்புயுத்தமா?

தன்னிஷ்டப்படி நடந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இது மட்டுமல்லாமல் அரசபடையினரின் சீற்றத்தைக் கூட்டும் வகையில் சரணடைந்த இராணுவத்தினரைக் கொல்வது, அப்பாவி முஸ்லீம் மக்களைக் கொல்வது, அப்பாவி சிங்கள மக்களைக் கொலை செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் இராணுவத்தினரின் சீற்றமானது தமிழ் மக்கள் மீது திரும்புகிறது. மக்கள் சுயாதீனமாக அமைப்பாகுவதை புலிகள் எப்போதும் தடுப்பதில் கவனமாக இருந்து வருகின்றனர். இதனால் அரசபடைகள் தம்மீது மேற் கொள்ளும் தாக்குதல்களுக்கு, மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மக்கள் எதுவுமே செய்ய முடியாதிருக்கின்றனர்.

புலிகள் தமது கட்டுப்பாட்டில் உருவாக்கும் மக்கள் அமைப்புக்கள் புலிகளின் கட்டுப்பாட்டை இழந்த பிரதேசங்களில் அர்த்தமற்றவையாகின்றன. ஆனால் மக்களுக்கு நாளாந்தம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க புதிய அமைப்புகள் தேவைப்படுகின்றன. மக்கள் தமது அனுபவத்திற்கூடாக தெளிவாகவும், துணிவாகவும் தமது ஆளுமையின் அடிப்படையில் தமது நலன்களை வெளிக் கொணரும் ஆற்றலை வழங்கக் கூடிய அரசியலைப் புலிகள் ஒருபோதும் முன் கொணர மாட்டார்கள். அடிப்படையில் இந்த அரசியலுக்குப் புலிகள் எதிரானவர்கள். இவ்வாறான அரசியல், ஆற்றல்கள் வளர்க்கப்படாத சூழலில் மக்கள், ஸ்தாபன மயமாக்கப்படாத சூழலில், இராணுவத்தின் நல்லெண்ணத்தில் தங்கி தம்மைப் பாதுகாக்கும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் மக்களைக் கவசமாக்கிக் கொண்டு அரச படைகளை, சிங்கள முஸ்லீம் ஊர்காவல் படையினரை அல்லது அப்பாவி மக்களைத் தாக்கிவிட்டு ஓடுவது எவ்வகையில் தடுப்பு யுத்தமாகும்?

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் புலிகள், மக்களைத் தொடர்ந்தும் பலமற்றவர்களாக்கும் வேலையையே செய்து வருகின்றனர். பொதுமக்களை பகடைக்காய்களாகவும், விலங்குகளாகவும் வைத்திருந்து, தமது பாசிச சர்வாதிகாரத்தை தமிழ் மண்ணில் நிறுத்துவதன் மூலமே, தமிழ் மக்களை பொறிக்குள் அகப்பட்ட நிலைக்குள் வைத்தே தமது இருப்பைப் புலிகள் தொடர்கின்றனர். இதனால் மக்கள் தம்மால் ஒன்றுமே செய்யமுடியாது என்று எண்ணுமளவிற்கு ஒரு சூழல் உருவாக்கப் பட்டுள்ளது. சாதாரண மக்கள் மத்தியில் காலம் காலமாக வளர்ந்துவிட்ட தப்பபிப்பிராயங்கள், காழ்ப்புணர்ச்சிகள் என்பவற்றை மையப்படுத்தி, அவற்றைப் பயன்படுத்தி தமது நிலையைப் பலப்படுத்துவதில் இவர்கள் எவர்க்கும் சளைத்தவர்கள் அல்லர். முஸ்லீம் மக்கள் மீதான குரூரத்தனம் இதை வெளிக் கொண்டு வந்தது. இது இவர்களின் மூலோபாய அரசியலைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய பாத்திரமாகும். அதாவது படைகளைக் கொண்டு தாக்கச் செய்வது, அதனால் மக்களுக்கு படைகள் மீது ஏற்படும் வெறுப்புணர்ச்சியை மட்டும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது என்பதே இவர்களின் யுத்த




தந்திரமாகும். தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தின் இன்றைய கட்டமானது அனைத்து வழிகளிலும் குறிப்பாக அரசியல், பொருளாதார, சமூக, இராணுவ ரீதியில் தீர்மானிக்கும் சக்தியாக, புலிகள் தமது தொடர்ச்சியான குரூர அழிவு அரசியலின் துணையுடன் மேலாதிக்கத்திற்கு வந்துள்ளனர். சிறிலங்கா அரசுக்கு எதிராகப் போராடக் கூடிய சக்திகளை ஐக்கியப்படுத்தல், அவர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல்களால் அவர்களைப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தியுள்ளது. இப் போராட்டத்தின் பின்னணியையோ அல்லது புலிகளின் வரலாற்றையோ பார்க்காமல் இருப்பவர்க்கும், பார்க்க மறுப்பவர்க்கும் புலிகள் போராடுவது மட்டுமே தெரிகின்றது. புலிகளின் அரசியல் தோற்றப்பாட்டினைப் புரிந்து கொள்ள, அது சாராம்சத்தில் எதை மையப்படுத்தியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். தனியே மக்கள் அழிவதை மட்டும் வைத்து போராட்டம் பிழையெனக் கூறின் அது தவறானது. ஆனால் இந்த அழிவு தவிர்க்க முடியாததா?. புலிகளின் வங்குரோத்து அரசியலுக்கு இன்றைய நிலைமையும் அழிவுகளும் தவிர்க்க முடியாதவைதான். ஏனெனில் இலங்கை அரசின் மற்றைய கூறுகளைக் கவனத்தில் எடுத்து அவற்றில் காணப்படும் வெடிப்புகளின் ஊடாக போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று ஒரு மக்கள் விடுதலை என்னும் அடிப்படையில் போராட்டத்தை நடத்த தேவையான அரசியல் புலிகளிடம் இல்லை. எமது சமுகத்தின் பல்வேறு கூறுகளை இணைத்து சமூகப்பலவீனங்களை மீறி பலங்களை ஒன்றிணைத்து உயிரோட்டமாக வளர்த்தெடுக்கும் தேசநிர்மாண நோக்கிலான அரசியல், புலிகளிடம் இல்லை. வெறுமனே மக்கள் அழிவதனூடாக வரும் பிரச்சாரத்தையே தமது நோக்கங்களை நிறைவு செய்யப் பயன்படுத்துகின்றனர். மக்கள் பற்றிய புலிகளின் பார்வை குரூரமானது. இந்நிலையில் புலிகளுக்கு, இன்றைய அழிவுகள் தவிர்க்க முடியாதவை. இங்கு எதிரி எனக் கூறப்படும் சிறிலங்கா அரசானது ஓர் பின்தங்கிய மூன்றாம் உலக

நாடு. இது அரசியல் பொருளாதார ரீதியில் பின்தங்கியது. இந்நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பது சிங்கள ஆளும் வர்க்கம் மட்டுமல்ல. பல்வேறு வெளிநாட்டு சக்திகள் இந்நாட்டின் செயல்பாட்டுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஆகவே இதன் பல்வேறு அம்சங்களைக் கவனத்தில் எடுக்காது ஒரு சிலவற்றை மட்டும் எடுத்து அவற்றை முழுமைப்படுத்திப் பார்க்கும் பார்வையும், அதன் பின்னணியில் மட்டும் அரசியல் இராணுவ தந்திரோபாயங்களை வகுப்பதும் இறுதியில் தேவையில்லாத அழிவுக்கு இட்டுச் செல்லும். இலங்கையின் ஆளும் வர்க்கமும் அரசும் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட சிங்கள, பௌத்த இனவாதக் கருத்தமைவின் பிடிக்குள் சிக்கியுள்ளது. ஆயினும் இவற்றை மீறி அவை இன்றைய சூழலில் உலக முதலாளித்துவத்துடன் இணைந்துள்ளதால் உருவாகிய பொருளாதாரக் கொள்கைகளின் தேவை, இந்தியாவின் தாக்கம், பல்வேறு மனித உரிமை ஸ்தாபனங்களின் தாக்கம், ஆகியவற்றினால் தனியே இனப்படுகொலைகளை மாத்திரம் நடத்திக் கொண்டிருப்பது முடியாத காரியம். அரசு கண்மூடித்தனமாக இனப்படுகொலையை கொள்கைவடிவில் கடைப்பிடிக்க முடியாது. அரசபடையினர் J V P கிளர்ச்சியின் போது பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் பலிகொண்டதை சிங்கள இனப்படுகொலை எனக் கூறமுடியுமா?. அரசு இனப்பிரச்சனைக்குத் தீர்வை விரும்பலாம். ஆனால் அவர்களின் தீர்வு என்பது சிங்கள இனவாதப் பார்வைக்குள்ளால் வரையறுக்கப்படும் போது அது எவ்வளவு தூரம் பிரச்சனையின் சாராம்சத்தைப் புரியமுடியும் என்பது கேள்விக்குறியே. அதனை எதிர்ப்பதும் முட்டாள் தனம் எனினும் மேலே கூறிய தேவைகள் தீர்வுக்கான குறைந்த பட்ச அமைப்பு வடிவத்தைக் கொணர்ந்து, இனப்பிரச்சனையைக் கையாளக் கூடியளவிற்கு கொண்டுவர முயற்சிக்கலாம்.இத்தகைய சூழலை தமிழ் மக்கள் நலனிற்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஆளுமை அவசியமாகும். சிறிலங்கா அரசின் தொழிற்பாட்டைப் புரிவதும், சிங்கள மக்களுக்கும் அரசுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை இனம் கண்டு கொள்வதுமே சரியான மூலோபாயங்களை வகுப்பதற்குதவும். ஓர்புறம் மூன்றாம் உலக நாட்டின் அரசு என்றவகையிலும், இன்றைய பொருளாதாரக் கொள்கையின் பின்னணியிலும் குறிப்பாக யு.என்.பியின் இருப்பைப் பொறுத்தவரையிலும் திட்டமிட்டு யுத்தத்தைத் தொடர வேண்டும் என்ற நிலையில் இல்லை. இனப்பிரச்சனையைத் தணித்து ஓரளவு தூரத்திற்குக் கையாளக் கூடிய நிலையில் வைத்திருந்தால் அதன் இருப்பிற்கு சாதகமான சக்திகளின் பூரண ஆதரவு அதற்கு கிடைக்கும். மறுபுறம் அது காலம்காலமாக வளர்ந்து வந்த சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் சிறைக்குள் இருந்தும் விடுபடமுடியாமல் தத்தளிக்கிறது. ஆயினும் கடந்த கால அனுபவங்கள், இந்தியத் தலையீடு, அண்மைக்கால JVPயின் எழுச்சி , அழிவு என்பன ஸ்தாபன மயமாக்கப்பட்ட சிங்கள பௌத்த பெரும்தேசிய வாதத்தின் அத்திவாரத்தில் பல வெடிப்புக்களை

உருவாக்கி பல வெடிப்புக்களை உருவாக்கியுள்ளது. இவற்றை நமது விடுதலைக்கு அத்திவாரமிட, பாதுகாப்பற்ற நிலைக்குப் பரிகாரம்காண சாதகமாகப் பயன்படுத்த முடியும். இந்த அரசியல் ஆளுமை இல்லாதவிடத்து எல்லா விடயங்களையும் தமக்கேற்றாற்போல் கறுப்பாகவும், வெள்ளையாகவும் காண்பித்து முரட்டுத்தனமாகச் செயற்படுவதும், அதன் பின்னணியில் யுத்தத்தை முன்னெடுப்பதும் எவ்வகையில் தடுப்பு யுத்தமாகும். தாக்குதலைத் தொடங்கிப் பின் அநாதரவாக மக்களை விட்டுவிட்டு ஓடி ஒழிந்து பின்னர் தடுப்பு யுத்தம் என்று அல்லது இறுதியுத்தம் என்று சொன்னால் மட்டும் போதுமா?

பிரமதாசாவை நம்புகிறோம் என்று கூறி ஒருவருடம் பேச்சுவார்த்தை செய்யும் காலகட்டத்தில் வட-கிழக்குப் பகுதியில் மக்களின் குரல்வளைகளை நெரித்து எதிரியின் ஆயுத உதவியுடன் கொழும்பில் செய்த கொலைகளை நாம் மறந்து விடமுடியுமா? அரசை சர்வதேச ரீதியில் அம்பலப் படுத்துவதற்குப் பதில், இரகசிய இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்தி மக்களைப் பற்றிய அக்கறையின்றி தமது பிடியை இறுக்குவதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டதில் தடுப்பு யுத்த அறிகுறி ஏதும் உண்டா?

ஒருபுறம் கட்சிக் காரியாலயங்களுக்கு வர்ணம் தீட்டி, பூச்சாடி வைத்து தேர்தல் கால சூழ்நிலை போல் தயாரிப்பு செய்து கொண்டே மறுபுறம் அவசர அவசரமாக சிறுவர்களையும், யுவதிகளையும் ஆயுதபாணிகளாக்கி ஒரு நிலையற்ற நிலையில், தமக்கும் தீர்க்கமான முடிவில்லாத நிலையில், மக்களைத் திடீரென போர்காலச் சூழலில் தள்ளிவிட்டது எவ்வகையில் தடுப்பு யுத்தமாகும்.

கைது செய்த பொலிசாரை, குறிப்பாக முஸ்லீம் பொலிசாரை படுகொலை செய்தது எவ்வகையில் தடுப்பு யுத்தமாகும்? கைது செய்த சிங்களப் பொலிசாரைக் குறைந்தபட்சம் பணயக்கைதிகளாக பயன்படுத்தி அப்பாவி மக்களின் அழிவைக் குறைத்திருக்க முடியுமல்லவா? அப்பாவி முஸ்லீம் மக்களைப் பள்ளிவாசலில் வைத்து படுகொலை செய்தது தடுப்புயுத்தம் அல்லது இறுதி யுத்தத்தின் ஒரு பகுதியா?

சில அரைவேக்காட்டு மாக்சிஸ்டுகள் இந்த யுத்தத்தை தடுப்பு யுத்தம் என வாதாடும் போது, EPRLF, இந்தியப்படை வெளியேற்றத்தின் போது " புலிகள் சிறிலங்கா அரச கூட்டு தமிழ் மக்களுக்கு வேட்டு" என வைத்த முழக்கத்தைக் காட்டி, அவர்கள் தமது நிலைப்பாட்டை மேலும் நியாயபூர்வமாக விளக்கலாம். முன்னர் இழந்து போய் இருந்து இந்தியாவால் பெற்றுக்கொடுத்த பல பிரதேசங்களைக் கூட புலிகள் தமது தவறான அரசியலால் இழக்க நேரிட்டது என நியாயப்படுத்தினால் அதிலும் ஓரளவு உண்மையுண்டு.

எனவேதான் இந்த யுத்தத்தைத் தடுப்பு யுத்தமா, இறுதியுத்தமா, தாக்குதல் யுத்தமா என ஆராய்வதை விடுத்து இவ்யுத்தம் எக்கட்டத்தில், எச்சூழலில் எவ்அரசியல் காரணமாக நடைபெறுகின்றது, இது எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்தக் கட்டத்தில் எந்தவிதமான சூழலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது? இந்நிகழ்ச்சிப் போக்கில் எமது போராட்டம் நிலைப்பாடு உலகில் எவ்வாறு

நோக்கப்படுகிறது, எம்மக்கள் மத்தியில் தம்மைப் பாதுகாக்க யாரை எதிர்பார்க்கிறார்கள் என்பவை முக்கியமானது. விடுதலைப்புலிகள் தமது உறுப்பினரை வெறுமனே தற்கொலைப்படையாக மாத்திரம் பாவிப்பதனூடாகவும், சிறிலங்கா அரசினதும், இராணுவத்தினதும் பலவீனத்தின் மூலமும், வெளித் தோற்றப்பாட்டிற்கு யாழ் குடாநாட்டில் தற்காலிக தடுப்பு யுத்தமாகத் தோற்றப்பாடு தெரிகிறது. சிறிலங்கா அரசபடை யாழ் குடாநாட்டிற்குள் நுழைய முயலும் போது ஏற்படும் பாரிய அழிவுகள், அதனால் சர்வதேச அரங்கில் ஏற்படும்தாக்கம், இந்தியாவின் நிலைப்பாடு என்பனவும் இன்று தடுப்பாக இருக்கின்றது. இதற்கான பங்களிப்பைச் செய்யும் மனித உரிமை சக்திகள் மற்றும் சமூகப் பிரக்ஞை உள்ள சக்திகளின் குரல்வளைகள் நசுக்கப்படுவதும், புலிகளின் பிரச்சாரம், அவர்களது கொலை அரசியல் என்பவற்றால் சர்வதேச அரங்கில் மதிப்பிழந்து வருவதும் அந்த தடுப்பைக் கூட உடைத்தெறிவதாய் உள்ளது.

உணவு உட்பட சகலவற்றிற்கும் எதிரி அரசை எதிர்பார்த்து , அவர்கள் அனுப்பும் கூட்டுறவு சங்க உணவுப் பொருட்களை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பது என்னும் போர்வையின் கீழ் கையாடல் செய்வது எவ்வகையில் தடுப்பு யுத்தமாகும்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களை தமது குடிமக்கள் என்று கூறுமட்டும் அதனை நடைமுறையில் காட்டும்படி கோரிக்கைவிடுவது நியாயமானது. அதேபோல் ஈழப்போராட்டத்தின் இறுதிப் போராட்டம் எனக் கூறும் புலிகளையும் மக்கள் கேள்வி கேட்பது நியாயமானது. ஆனால் புலிகள் மக்களுக்கு பதில் சொல்லவேண்டிய சூழல் இன்றி, மக்கள் புலிகளுக்குப் பதில் சொல்லவேண்டிய சூழலே இன்றுள்ளது.

மக்களோ அல்லது எந்தவித சக்தியோ தம்மைமீறி ஒன்றுமே செய்ய முடியாது எனும் நிலையை ஏற்படுத்தியதன் மூலம் "நாயகர்"களாக புலிகள் உருவாக்கியுள்ளனர். இந்த நாயகர்களின் பெறுமானங்களைத் தீர்க்கமாக ஆராய முனையும் போது சார்புநிலையிலேயே, அதாவது மக்களின் பரிதாபகர நிலையின் பின்னணியிலேயே நாயகர்கள் பாத்திரம் கருத்துருவம் பெறுகின்றது. ஆனால் புறநிலையில் பார்க்கும் போது தொடர்ச்சியான வரலாற்றில் புலிகள் மக்களை இட்டுக் சென்ற அரசியல் சாராம்சத்தைச் சிந்திக்க முற்படும் போது நாயகங்கள் வேஷம் கலைந்து அழிவு அரசியலின் உண்மை வெளிப்படும்.

ஒருவித நோக்குமின்றி தமது அரசியல் வங்குரோத்தை மறைக்க ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியரை நரபலியிடுவதைத் தடுப்புயுத்தம் என்னும் போர்வைக்குள் மறைத்து விட முனைவது, அதுவும் அத்தடுப்பு யுத்தத்தில் எந்தவித பங்கும் ஆற்றாது, அதேவேளை மேதாவித்தனத்துடன் தடுப்பு யுத்தம்தான்; ஆனால் விடுதலையைத் தரப்போவதில்லை என்ற கெட்டிக்காரக் கணிப்பினால் இந்த அரைவேக்காடு மாக்சிஸ்டுகள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிவதை உதாசீனப்படுத்துவது மிகவும் கீழ்தரமான செயலாகும்.

ஒருவரது பார்வையின் முழுமை, அவன்

எதனை விரும்புகிறான் என்பதை மட்டுமல்ல எதனை வெறுக்கிறான் என்பதிலிருந்துதான் புரியமுடியும். பரந்த ஆட்சிய வேட்கையுடன் போராடக் கூடிய இளைய தலைமுறையினர் விட்டில் பூச்சிகள் போல் அழிகின்றனர். இவ்வழிவு அரசியலைக் கண்டு, அவர்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் குறுந்தேசிய(தமிழ்) இனவாதக் கோசங்களை இனங்கண்டு வெறுப்படைந்து ஆத்திரமடையாத இவர்களின், மக்கள் பற்றிய பார்வையின் உண்மை சொருபத்தைப் புரிய முடிகின்றது. சமூகப்பிரக்ஞையும், மக்கள் விடுதலைபற்றிய பிரக்ஞைபூர்வமான சக்திகளை அழிப்பதிலும், ஆரோக்கியமான எந்த சக்திகளும் வளராமல் தடுப்பதிலும், இளம் சிறுவர் சிறுமியர் விடுதலை பற்றிய புரிந்துணர்வைப் பெறாமல் தடுப்பதிலும், மக்கள் தமது வரலாற்றையும் பலவீனத்தையும் புரிந்து கொள்ளாமல் தடுப்பதிலும் இப் போராட்டம் - இறுதியுத்தம் அல்லது தடுப்பு யுத்தம்- வெற்றி பெறுகின்றது. நேரடியாக இல்லாவிடினும் மறைமுகமான மேற்கூறிய அர்த்தத்தில் இந்த யுத்தம் எதிர்ப்பு யுத்தம் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்த யுத்தமானது சாராம்சத்தில் தடுப்புமல்ல தாக்குதலும் அல்ல. மாறாக அழிவு அரசியலின் நேரடி விளைவாகத் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தமாகும். இதில் தாக்குதலும் தடுத்தலும் வெளித் தோற்றத்தில் தெரிந்தாலும், இந்த யுத்தமும் அழிவும் இன்றியே புலிகளின் இப்போராட்டத்தின் இறுதியில் பெறப்போகும் எந்ததீர்வையும், எமது ஆதிக்க அரசியலில் சிறிது ஆரோக்கிய கூறாவது இருந்திருக்குமேயானால் பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியப்பாடுகள் இருந்துள்ளன.

இறுதியாக மாபெரும் அழிவுகளின் பின்னர், அதன் பின்னணியில் நாடு பிளவுபடப் போகின்றதென்றால் அது இந்தியாவின் அநுசரனையுடன் மிகக் குறிப்பான சில விசேட சூழலிலேயே நடைபெறலாம். (ஆனால் இதற்கான சாத்தியப்பாடுகள் மிகமிகக் குறைவு) எனினும் அங்கும் இந்தியாவிற்கு எதிராகப் போராடி இறந்தோர்களினதும், அழிவுகளினதும் மத்தியில் இதற்கு என்ன அர்த்தத்ததைக் கொடுக்கும்.

தமது சுகபோகத்திற்காக வெளிநாடுகளில் குடியேறிய பெரும்பான்மையோர் தமது புதியவாழ்விற் சுபீட்சம் வேண்டி சிறுவர் சிறுமியரை நரபலி கொடுக்கிறார்களா என ஒரு கணம் யோசித்துப் பார்க்கவேண்டும். (வெளிநாடு சென்றாலும் சமூகப்பிரக்ஞையுடன், எமது அழிவுகள் பற்றி, மக்கள் பற்றி ஆழமாக சிந்திப்பவர்களை இதில் அடக்கவில்லை) இறுதியாக, யாழ் குடாநாட்டில் புலிகள் காலையும் மாலையும் ஒலிபரப்பும் தலைவர் வணக்கப் பாடல்களில் ஒன்று

பால்மணம் மாறாக் குஞ்சுகள்
பிரபாகரன் வளர்த்த பிஞ்சுகள்

எனும் அடியுடன் தொடங்குகிறது ஆனால் தமிழ் மக்கள் "பிரபாகரன் அழித்த பிஞ்சுகள்" என்றே முணுமுணுக்கின்றனர். மேலும் போர் தொடங்கிய பின் யாழ் மண்ணில் உலாவரும் வயோதிபர் ஒருவர். சிலர் அரசு இனப்படுகொலை செய்கின்றது எனக் கூறியபோது சொன்னார் : (தொடர்ச்சி 27 ஆம் பக்கம்)

# கியூபா:

## இன்னும் எத்தனை காலம்?

சுமார் 1 வருடமாக இடம் பெற்று வரும் வார்சோ ஒப்பந்த நாடுகளின் குலைவையும், நிகாருவா புரட்சியாளர்களின் தேர்தல் தோல்வியையும் அடுத்து உற்சாகமடைந்துள்ள மித வாதிகள் இப்போது கியூபாவின் வீழ்ச்சியை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இதுவரை பலரின் கவனத்தை ஈர்த்திருக்காத கியூபா இப்போது பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சியாளர்களின் படையெடுப்புக்கு மையமாகியுள்ளது. இச் செய்தியாளர்கள் கிழக்கைரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணிகளை வைத்தே கியூபாவையும் 'ஆராய்வதால்' கியூபா மக்களின் மனோ நிலைகள் மறக்கப்பட்டு, பிடல் கஸ்ரோவின் புகழ் மேலோங்கி இருப்பதைக் காட்டி, கிழக்கைரோப்பாவின் சீரழிவுகள், இங்கு நடைபெறக் காலதாமதம் ஆகலாம் என்று தங்கள் 'படைப்புகளை' எழுதி வருகிறார்கள். கியூபாவின் புவியியல் சார் காரணிகளை இவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

இடதுசாரிகளால்கூட கியூபாவின் உண்மையான சமூக அரசியல் நிலைமைகள் அலசப் படுவதற்குப் பதிலாக 'தத்துவார்த்த கண்களால்' வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் பார்க்கப் படுவதே நிகழ்கிறது.

இந் நிலையில் செப்டம்பர் 90 இன் இறுதியில் இருந்து கியூபாவின் அன்றாடப் பாவனைப் பொருட்களான அரிசி, இறைச்சி, பால், எண்ணெய், மின்சாதனப் பொருட்களின் பங்கீடு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இந்த வருடத்தின் இந்த மாதத்திலிருந்து கியூபாவுக்கு இறக்குமதியாகும் பொருட்களுக்கான கட்டணம் யு.எஸ். டொலரிலேயே கட்டப்பட வேண்டும் என்ற புதிய நிர்ப்பந்தம், இனிவரும் காலங்களில் அரசியல், பொருளாதார ரீதியிலான கியூபாவின் 'நம்பிப் பிழைத்தலை' கடினமாக்கியுள்ளது.

மறுபுறத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபாவுக் கெதிரான தனது சண்டித்தனத்தையும், போருக்கான தயாரித்தலையும் தீவிரப்படுத்தி வருகிறது. எந்நேரமும் பாயத் தயாராயிருக்கும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பிலிருந்து கியூபாவைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கஸ்ரோவின் தலைமையில் கியூபா மக்கள் ஒற்றுமையாக இணைந்து மேற்கொண்டு, தங்கள் வாழ்வை அர்ப்பணித்து சோசலிஸத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற குரல்கள் இப்போது பலமடைந்து வருகின்றன. எனினும் இவற்றிலிருந்து கியூபாவின் உண்மை நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்வது கடினமாகவேயுள்ளது. இப்படியான

தொடர்ச்சியான 'எழுச்சி' சுலோகங்கள் கியூபாவின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் எவ்வாறுள்ளன என்பதை மறைத்து விடுவதே இதற்கான காரணம்.

சோசலிச அமைப்பு நாடுகளின் சீரழிவுகளுக்குக் காரணம் ஏகாதிபத்தியத்தின் ஆதரவு மட்டுமே என்று யாரும் சொல்லிவிட முடியாது. உள்நாட்டுப் பிரச்சினைகள், பொருளாதார, அரசியல், இராணுவப் பாதுகாப்பு போன்றன சந்தேகத்துக்கிடமின்றி வார்சோ ஒப்பந்த நாடுகளை மறுசீரமைத்துக் கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டிருந்தன. கியூபாவிலும் இந்த ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. உள் நாட்டு அரசியலில் திருப்தியின்மை கூர்மையடைந்து வருகிறது. பொருளாதாரத் தேவைகளும், ஜனநாயக மறுப்புக்களும் கியூபா தலைமை மீதான நம்பிக்கையீனத்தை வளர்த்து விடக்கூடிய நிலையே காணப்படுகிறது.

கியூபாவில் நிலவும் திருப்தியின்மை, அவநம்பிக்கை என்பன ஸ்தாபன மயமாகி எதிர்சக்தியாக உருவாகுமானால், அதற்கு அரசியல் முறையிலான செயல் வடிவங்களைத் தவிர்த்து கியூபா தலைமையானது ஆத்திரப்பட்ட முடிவை மேற்கொள்ளுமாயின் 30 வருடங்களாக ஆக்கிரமிப்புக்குக் காத்திருக்கும் அமெரிக்காவுக்கு இதுவே அரசியல் சாதகமாகி கியூபா புரட்சியை முறியடிக்க போதுமான வழிகளை வழங்கிவிடும்.

கடந்த மாதங்களில் சோசலிஸ நாடுகளில் ஏற்பட்ட நிகழ்வுகளையடுத்து உலகெங்குமுள்ள இடதுசாரிகளின் கடமை இன்று இரட்டிப்பாகியுள்ளது.

1. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக கியூபாவைப் பலப்படுத்தவேண்டும்.

2. கியூபாவின் முரண்பாடுகள், அபிவிருத்திக் குறைபாடுகள், பிழையான வளர்ச்சி, பற்றிய விவாதங்களை மேற்கொள்ள வேண்டும். இது இடதுசாரி அரசியலுக்கு முக்கியமானது. அதேவேளை ஏகாதிபத்தியப் பிரச்சாரமாகவோ, இடதுசாரிப் புத்திஜீவிதப் புலம்பலாகவோ இருந்துவிடக்கூடாது.

ஏகாதிபத்திய நலன்களை, செயற்பாடுகளைத் தோலுரித்துக் காட்டவேண்டும். உல்லாசப் பிரயாணிகள் அலையினால் கியூபா இளைஞர்களிடையே வளர்ந்து வருகின்ற நவநாகரிக மோகத்திலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும். 3ஆம் உலக நாடுகளில் நிலவுகின்ற முரண்பாடுகளை விளங்கிக் கொண்டு அதன்மூலம் ஓர் சர்வதேசிய அரசியலை வளர்த்தெடுக்க வேண்டிய - புரட்சிகர அரசியலை நடத்துவதற்கான - பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய சாத்தியங்களை இளைஞர்கள் கண்டு கொள்ளாமல் அவர்கள் கவனத்தை உல்லாசப் பிரயாணத் துறையினால் நாட்டுக்குள் புகும் 'நவநாகரிகங்கள்' ஈர்த்து விடுகின்றன.

கியூபா போலந்தோ, பல்கேரியாவோ அல்ல. கியூபாவின் சோசலிஸ அமைப்பானது 'சிவப்பு இராணுவத்தின்' தலையீட்டினால் சாதிக்கப் பட்டதல்ல. மாறாகத் தங்கள் கண்களுக்கு முன்னாலேயே வலிமையான, ஏகாதிபத்திய அதிகாரத்திற்கு எதிரான மக்கள் எழுச்சியினால் ஸ்தாபிக்கப் பட்டது. இதன் காரணமாகவே கியூபத் தலைமையானது தனது அரசியல் அதிகாரத்தை இன்றுவரை வைத்திருக்க முடிகிறது.

கியூபாப் புரட்சியானது முழு லத்தீன் அமெரிக்க நாடுகளிலுமுள்ள இடதுசாரிகளுக்குப் பல புதிய சிந்தனைகளை உருவாக்கியிருக்கிறது. கியூபா புரட்சியின் இறுதி வெற்றிக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்புவரை மொஸ்கோ சார்பு கொம்யூனிஸ்டுகளால் இப் புரட்சி 'குட்டி பூர்ஷுவா சாகசச் செயல்' என நிராகரிக்கப் பட்டது.

கியூபாவின் புரட்சிகர வெற்றியானது

இதுவரைகாலமும் சந்தர்ப்பவாத, பிழைப்புவாத 'அரசியல்' செய்துகொண்டிருந்த கொம்யூனிஸ்ட் கட்சிகள் மீதான முக்கியமானதும், செயல்முறை ரீதியானதுமான விமர்சனமாக அமைந்தது.

கியூபா புரட்சியை அடுத்து வைதீக மார்க்ஸியர்களுக்கு எதிரான ஒரு புதிய இடதுசாரிகள் உருவாக்கம் நிகழ்ந்தது. இன்று அநேக மத்திய அமெரிக்க நாடுகளிலுள்ள புரட்சிகர விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளாக இவர்களை நிறுத்தியது.

பனாமாவைச் சேர்ந்த பௌல் ரைஸ் என்ற சமூகவியலாளர் சொல்வதாவது:

1. அமெரிக்காவுக்குக் கீழே லத்தீன் அமெரிக்காவில் புரட்சி சாத்தியம் என்பதைக் கியூபா எடுத்துக் காட்டியது.

2. சர்வாதிகாரமும் அதனது இராணுவமும் வெல்லப்படலாம் என்பதும், வெல்லப்பட்டு மீண்டும் ஒரு அடக்குமுறை இயந்திரம் இல்லாமல் ஒரு புதிய சமூகம் உருவாகலாம் என்பதையும் கியூபா நிரூபணமாக்கியது.

3. லத்தீன் அமெரிக்காவில் சோசலிஸம் சாத்தியம் என்பதும் அது, பாதுகாக்கப் படலாம் என்பதும் கியூபாவால் காட்டப்பட்டுள்ளது.

4. புதிய சமூகத்தின் உருவாக்கத்தின் போதான கஷ்டங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் கியூபா ஒரு நல்ல உதாரணம்.

5. எதிர்ப் புரட்சியாளர்களின் ஆத்திரத்திற்கும், புரட்சிகர சக்திகளின் நம்பிக்கைக்கும் கியூபா ஆளாகியுள்ளது.

6. அமெரிக்காவின் நலன்களுக்கு எதிரான இறைமை பொருந்திய அரசியல் லத்தீன் அமெரிக்காவில் நடத்தப் படலாம் என்பதைக் கியூபா காட்டியிருக்கிறது. இச் சுதந்திரமானது லத்தீன் அமெரிக்காவில் உள்ள மிதவாத அரசியல் வாதிகளுக்குக்கூட முக்கியமான விடயமாய் இருக்கிறது.

எனினும் இந்தச் சமூகவியலாளர் கூறியிருப்பதைப் போல லத்தீன் அமெரிக்காவில் உள்ள புரட்சிகர இயக்கங்களினால் எடுத்துக் கையாளக்கூடிய ஒரு 'வகைமாதிரி' யாக கியூபாவை விளங்கிக் கொள்ளக்கூடாது.

கியூபா வீழ்ச்சியடையுமானால், லத்தீன் அமெரிக்காவில் இடதுசாரிகளின் தோல்விக்கும், ஏகாதிபத்தியத்தின் போர்த் தந்திர வெற்றிகளுக்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.


## கடந்த காலங்களிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடியன.

கியூபாப் புரட்சிக்குப் பின்னரான கியூபாவின் பொருளாதாரத் திட்டமானது தனித்துவமானது என்பதைவிட கிழக்கு ஐரோப்பாவை ஒத்ததென்றே சொல்லலாம். உள் நாட்டின் நிலைமைகளும், வெளிநாடுகளின் 'ஆதரவுகளும்' கியூபாவின் பொருளாதார செயற்திட்ட அரசியலில் தலையிட்டு வளர்ச்சிப் போக்கை சீரற்றதாக்கின.

கியூபா, வார்சோ ஒப்பந்த நாடுகளின் நுகர்ச்சியாளராகவோ, விநியோகஸ்தராகவோ மட்டும் இல்லாமல், சர்வதேசப் பொருளாதாரத் தடைகளையும் மீறி தன்னுடைய பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க வேண்டிய நிலையில் இருந்தது.

முன்னைய வார்சோ ஒப்பந்த நாடுகளின் பொருளாதாரத்தில் தங்கியிருந்ததும், கிழக்கைரோப்பிய நாடுகளின் செயற்திட்டங்களை உள்ளடக்கியிருந்ததுமே கியூபா புரட்சியின் இன்றைய பெறுபேறுகளாக உள்ளன.

1951 இலிருந்து 1961 வரையான காலப் பகுதியில் சொத்துடமை, வர்க்கப் பிரிவினைகள் சமூக மாற்றத்தினால் மாற்றப்பட்டன. புரட்சிக்கு முன்னர் 86% ஆன வியாபார கட்டமைப்புகள் மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க மயமாகவும், 2.5%




கிழக்கு ஐரோப்பிய மயமாகவும் இருந்தன. 61இல் இது மாற்றப்பட்டு, ஏற்றுமதியில் 73.3% கிழக்கு ஐரோப்பாவிற்கும் 13.6% மட்டுமே அமெரிக்காவுக்கும் சென்றன. இந்த நிலையில் தனிவுடைமையானது முக்கியமான ஆனால் குறைந்த பட்ச பங்கை வகித்துள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட அமைப்பு மாற்றத்தினால் விளைந்த நெருக்கடியையடுத்து 1962 தொடக்கம் 1966 வரை கியூபாத் தலைமை குறுகிய கால, வருடாந்தத் திட்டங்களைத் தயாரிக்க முயற்சித்தது. சோவியத், செக்கோசிலாவாக்கிய தொழில் நுட்ப வல்லுனர்களின் உதவியுடன் மிகவும் மையப்படுத்தப் பட்டதும், மத்தியில் இருந்தே இயக்கக் கூடியதுமான தொழிற்(உற்பத்திச்) சாலைகள் நிறுவப்பட இருந்தன. கரும்பு உற்பத்தியின் தனிக் கலாசாரத் தன்மையை மாற்றி விவசாய நாடாக இருந்த கியூபாவை கைத்தொழில் மயமாக்குவதற்கான எத்தனிப்புகள் இதன்மூலம் திட்டமிடப்பட்டன. ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவப்பட்டு இதன் சாத்தியங்கள் பரிசீலிக்கப்பட்டன.

போதுமான தொழில்நுட்ப அறிவினதும், வல்லுனர்களின் குறைபாட்டினாலும், மேலும் கியூபாவின் புவிசார், வர்த்தகம், தனித்தன்மைகளும் கணக்கில் எடுக்கப் படாமையினாலும் (உ-ம்:-

1. மிகவும் உயர்ந்த வீதத்தில் உள்ள வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தில் கியூபா தங்கியிருந்தமை.

2. ஏற்றுமதிக்கான உற்பத்திப் பொருளாகத் தனியாக கரும்புப் பயிர்ச் செய்கை மட்டுமே இருந்தமை.) தொடர்ச்சியான பாரமான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

எச்ச சொச்ச முதலாளித்துவத்தின் தாக்கங்களும், மதிப்பற்றுப் போன திட்டமிடல் அதிகாரமுமே இத்தகைய பிரச்சனைகளுக்குக் காரணமென சே குவேரா குற்றஞ் சாட்டிய அதே வேளையில் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மத்திய குழு அங்கத்தவர் கார்லோஸ் றஃபேல் றொட்றிகெஸ் திட்டமிடல் அதிகாரங்கள் மையப்படுத்தப் பட்டதாக இல்லாமல் அதிகாரப் பரவலாக்கம் நடைபெறவேண்டும் என்றும், முடிவெடுப்பதற்கான உரிமைகள் பரவலாக்கத்தின் மூலம் வழங்கப்பட வேண்டுமென்றும் கருத்துக் கொண்டிருந்தார்.

1965க்கும் 1970க்குமான காலப்பகுதியில் மத்திய திட்டமிடல்

கைவிடப்பட்டது. திட்டமிடல் அமைச்சில் நிர்வாகிகள் தொகை குறைக்கப்பட்டது.

சே குவேரா மந்திரியாக இருந்த காலத்தில் முதலாளித்துவ பொருளாதாரத் திட்டங்களையும் அவ்வாறே ரஷ்ஷிய வழி பொருளாதாரத் திட்டங்களையும் நிராகரித்தார். அதற்குப் பதிலாக இந்தப் 'புதிய' மக்களிடம் சுயவிருப்பத்தின் அடிப்படையில் தாமாக முன்வந்து வேலைசெய்யும் சிவப்பு ஞாயிறுக்கள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1968ம் ஆண்டின் 'புரட்சிகர நடவடிக்கை'களின் கீழ் இரண்டொரு வாரத்தில் 56,000 (ஐம்பத்தாறாயிரம்) சிறு கைத்தொழிற் பேட்டைகள் அரசுடைமையில் இருந்து மக்கள் மயப்படுத்தப் பட்டது. இது மிகப் பெரிய பற்றாக் குறையை ஏற்படுத்தியது.

1970களில் சீனி உற்பத்தியில் 10 மில்லியன் தொன் விழுக்காடு ஏற்பட்டமையுடன் மேற்காட்டிய மக்கள் மயப்படுத்தல் போன்றவை தடைப்பட்டன.

1970களில் உற்பத்தி, அறுவடை வீழ்ச்சியை அடுத்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளினால் தன்னைச் சுயவிமர்சனத்திற்கு உட்படுத்திய பிடல் காஸ்ரோ, அக் காலத்தில் ராஜினாமாச் செய்ய முன்வந்தார்.

1970களில் ஏற்பட்ட நெருக்கடிகளினால் சோவியத் நாட்டின் வகை மாதிரியாகவே திட்டமிடல் நிர்வாகங்கள் அமைக்கப்பட்டன. இது 1975இல் உறுதியாகச் செயற் படுத்தப்பட்டது.

1972இல் கியூபாவும் வார்சோ ஒப்பந்த நாடுகளில் சேர்க்கப்பட்டது. இதனால் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் கார்லோஸ் றஃபேல் றொட்றிகெஸ் (Carlos Rafael Rodrigues) போன்றவர்கள் முக்கியமானவர்களாக ஆக்கப்பட்டனர். அரசியல் அணிதிரட்டலுக்கு முன்பாக பொருளியல் மேம்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. விவசாய உற்பத்தியே இம் மேம்பாடாக்கப்பட்டது. கைத்தொழில் மயமாக்கல் என்பது இறக்குமதியின் மூலம் நடைபெற்றது. சொல்லப் போனால் 70களில் கியூபா சமூகமானது சோவியத்தை முன்னுதாரணமாகக் கொண்டு நிறுவனமாக்கப் பட்டது. தொழில் நுட்பம் ரஷியாவின் ஒழுங்குமுறையில் சென்றது.

(தொடரும்)

தமிழில்: மௌழிக்

---

இன்றைய யுத்தம்.....
(தொடர்ச்சி)

" ....டேய் பெடியள்! கொள்ளிக்கட்டையை எடுத்து அவன்ர கையிலை குடுத்துப்போட்டு கொள்ளி வைக்கிறான் கொள்ளி வைக்கிறான் என்று கத்திறியள். உது ஆரைப் பேய்காட்ட.." என்றார். கொள்ளிக் கட்டையை குடுத்த கதையை மறந்தால், கொள்ளி வைக்கிறான் எனக் கூக்குரல் இடுவது தடுப்பாகத்தான் இருக்கும். பாவம் மக்கள் ஆனால் அவர்கள் இன்னமும் புத்திசுவாதீனம் அடையவில்லை. இப்பணியை புலிகள் முற்றாகச் செய்து முடிக்காவிட்டாலும், அரைகுறை மாக்சிஸ்டுகள் செய்து முடிக்க நினைத்தால் அதை யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

●

பு.கணபதிப்பிள்ளை (ஈ.ஜம்)

# செய்திக் குறிப்பு

01.05.91 வீரகேசரி

இனப்படுகொலை முடிவின்றித்தொடருமானால் பங்களாதேஷ் விவகாரத்தில் இந்திராகாந்தி செய்தது போல் இராணுவத் தீர்வொன்றை காண்பது குறித்து இந்தியா சிந்தித்தால் அதில் தவறேதும் இருப்பதக நான் நினைக்கவில்லை– ஜெயலலிதா

02.05.91 வீரகேசரி

மட்டக்களப்பு தெற்கில் அரசபடையினரால் 7 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் 5பேரின் சடலங்கள் சாக்கினுள் போட்டுக் கட்டப்பட்டு எரிக்கப்பட்ட நிலையில் வீதியோரம் கிடக்கக் கானப்பட்டன.

புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றேன். இன்னும் காலம் கடந்துவிடவில்லை. ஈழம் தவிர மற்ற எல்லாவற்றையும் வழங்க நான் தயார். பேச்சுவார்த்தைக்கு வாருங்கள். பேசி முடிவு காண்போம். தமிழீழம் வழங்கமுடியாது. இந்நாட்டின் இறைமை, ஒற்றையாட்சிமுறை, ஆட்பல உரிமைப்பாடு ஆகியவற்றிற்குள் பிரச்சினையைப் பேசித் தீர்ப்போம். – பிரேமதாச

இந்நாட்டு அரசியலில் மனிதாபிமானத்தையும், நேர்மையையும் எதிர்பார்க்கமுடியாது. தென்னிலங்கையில் ரயர், வட–கிழக்கில் தலையில் துப்பாக்கி வெடிதான் இன்றைய ஜன–னாயகமாக இருக்கிறது. தமது சார்பாக செயற்படு அல்லது....? என அரசியல்வாதிகள் பத்திரிகையளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் காலம் இது. 14 மாதங்களாகப் புலிகளுடன் அரசு பேசியது என்ன என்று 14 வரிக் குறிப்பாவது உள்ளதா? என்ன பேசினார்கள்? எதன் காரணமாக மோதல் ஆரம்பமானது என்றுகூட யாருக்கும் தெரியாது வடக்கு–கிழக்கு யுத்தத்தின் காரணமாக மக்கள்தான் இன்று கூடுதலாக இறக்கின்றனர். நாட்டை விட மக்களைவிட அரசியல்வாதிகளுக்குப் பதவியும், அதிகாரமும்தான் முக்கியமானதாகத் தெரிகிறது – குமார் பொன்னம்பலம்

03.05.91 தாயகம்

மட்டக்களப்பில் அரச குண்டர்படைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது குறிப்பாக இவர்களால் தலைவெட்டப்பட்ட மக்களின் முண்டங்கள் ஆங்காங்கே சாக்கில் கட்டப்பட்டபடி போடப்படுகின்றன. இதனால் மட்டக்களப்பில் பதட்டம் நிலவுகிறது.

செஞ்சிலுவைச் சங்கம், றெட்பானா ஆகியவற்றின் ஊடான உணவு விநியோகத்தைத் தடுத்தும், பொருட்களைப் பதுக்கியும், உள்ளூர் வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்வதற்குரிய அநுமதி மறுத்தும் வடக்கில்ஒரு செயற்கையான பஞ்சத்தைப் புலிகள் ஏற்படுத்த முயன்றனர் என்றும், இது அவர்களின் பிரச்சார நலன்களுக்காகச் செய்யப்பட்டதென்றும் இதனால் கிளிநொச்சி, பரந்தன் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பட்டினிச்சாவும், குழந்தைகளின் பட்டினியைச் சகிக்காமல் தற்கொலை செய்தலும் நடைபெற்றமையால் புலிகளின் உணவு மற்றும் சுகாதார– வேலைகளுக்கான பொறுப்பிலிருந்தவர் தனது பதவியைவிட்டு விலகியுள்ளார். பின்னர் இவர் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஈரோஸ் இயக்கத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மத்திய குழு உறுப்பினருமான பரராஜசிங்கம் தற்போது புலிகளின் யாழ்மாவட்ட அரசியற் பொறுப்பாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

03.05.91 வீரகேசரி

ஊர்காவற்துறையிலிருந்து வெளியேறி

ய படையினர் புளியங்கூடல், சரவணைச்சந்தி, சுருவில் ஆகிய பகுதிகளை நோக்கியும், நயினைதீவு ஊடாக புங்குடுதீவை நோக்கியும் – சென்றுள்ளனர். இதனால் இப் பகுதிகளிலிருந்து சுமார் 60ஆயிரம் மக்கள் வெளியேறி யாழ்நகருக்கு வந்துள்ளனர்.

கடந்த 1 வாரகாலத்தில் மட்டும் அரசபடையினரால் கொல்லப்பட்ட 12க்கும் அதிகமான தலையற்ற சடலங்கள் மட்டுநகரில் பல பாகங்களிலும் கிடக்கக் காணப்பட்டன.

அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் ஜனநாயக உரிமைகள் யாவும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன தொழிற்சங்கங்கள் கூடிக் கூட்டம் நடத்துவதற்கும், ஊர்வலம் நடத்துவதற்கும், ஒலி பெருக்கி பாவிப்பதற்கும் கூடப் பொலிஸ் நிலையங்கள் தடைவிதிக்கின்றன. வேலை நிறுத்த உரிமைகூட இன்று தொழிற்சங்கங்களுக்கு இல்லை – ஐ.தோ.ச

14 வருடங்களாக நாட்டை ஆண்ட ஐ.தே.க அரசு நாட்டிலுள்ள – தொழில்வளங்கள் அனைத்தையும் கூட்டு வியாபாரம் என்ற போர்வையில் அமெரிக்கா, கொரியா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு விற்றுவருகிறது. இதனால் முடிவில் நம் நாட்டுத் தொழிலாளர்கள் நடுத் தெருவில் விடப்படுவார்கள். நாட்டின் பொருளாதாரம் முற்றாகப் படுத்துவிடும் – ம.ஐ.மு.

சமதர்மவாதத்தின் தந்தையான – கார்ல்மார்க்ஸ் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோசத்தை எழுப்பினார். மார்க்ஸ் மரணமடைந்து இப்போது நீண்ட காலம் கழிந்துள்ளது. சமதர்மவாதமும் இறந்துகொண்டேயிருக்கிறது. இன்று நாங்கள் சகல உழைப்பாளி மக்களே வாக்களியுங்கள் என்று கூறுகிறோம் – பிரேமதாச

04.05.91 வீரகேசரி

தாண்டிக்குளத்தில் 24 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் 8க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பட்டப்பகலில் வாகனமொன்றில் வந்த குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இனந்தெரியாதோரினால் கொல்லப்பட்ட இருவரின் சடலங்கள் தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் மண்டூரில் கிடக்கக் காணப்பட்டன.

பிரேமதாசவின் பிறந்ததினக்கொண்டாட்டம் கம்உதாவ ஜயந்தி என்ற பெயரால் 10 தினங்களுக்கு கொண்டாடப்படுகிறது. இதற்காக கோடிகோடியாகப் பணம் விரயம் செய்யப்படுகிறது. வீட்டுத் திட்டங்கள் என்ற பெயரில் தீப்பெட்டிகள்போன்ற சிறுசிறு வீடுகளை நிறுவிக்கொடுத்து மக்களின் கண்களில் மண் தூவி வருகின்றனர். அந்த வீடுகள் காலக்கிரமத்தில் இடிந்து சரிந்துவிடுகின்றன.

முதலாளித்துவக் கட்சிகளின் ஆசை வார்த்தைகளை நம்பி அவர்களுடன் இணைந்துசெல்லும் இடதுசாரிக் கட்சிகள் ஈற்றில் பெரும் ஏமாற்றமடைந்து தங்கள் அழிவைத் தாங்களே தேடிக்கொள்ளவிருக்கின்றன. அவற்றிற்கு இனி எதிர்காலமே கிடையாது – அரச லிகிதர் சேவை சங்கம்.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் மனித உடல்களுக்கு மேல் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது பற்றிப் பேசுவது வெறும் புலம்பல் மாத்திரமேயாகும் – வாசுதேவ

05.05.91 வீரகேசரி

சுமார் 2 வாரங்களில் மட்டக்களப்பில் 30பேர் வரையில் தலைகள் துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பரிஸ் மருத்துவக் குழு அமைப்பின் 4 உறுப்பினர்கள் வட பகுதியில் இலங்கை விமானப்படையினரால் சுடப்பட்டுக் காயமடைந்துள்ளனர்.

07.05.91 வீரகேசரி

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள காட்டுப் பிரதேசக் கிராமப் பகுதிகள் மினி யுத்த களமாக மாறியுள்ளன. குண்டுவீச்சு விமானங்களும், பீரங்கி பூட்டிய ஹெலி களும் இப் பகுதியில் அடிக்கடி தாக்குதல் நடாத்தி வருகின்றன.

ஜூன் மாதம் ஆரம்பித்த யுத்தத்தின்பின் மல்லத்தை, வீரமுனை ஆகிய கிராமங்களிலிருந்து படையினராலும்

ஆர்க்காவற்படையினராலும் கடத்தி செல்லப்பட்ட 102பேரின் நிலை தொடர்பாக ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. திருமணமான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோர் காணாமற் போனோரில் அடங்குவர்.

வடபகுதி சீ-நோர் கடற்றொழில் திட்டங்களில் பணியாற்றும் 218ஊழியர்களுக்கு கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக சம்பளம் வழங்கப்படவில்லை.

08.05.91 வீரகேசரி

கோழியகுளத்தில் 60 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

09.05.91 வீரகேசரி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மோதல் காரணமாக கடந்த 10 மாதங்களாக சுமார் 1 இலட்சம் பேர் வேலையிழந்துள்ளனர். யுத்த நிலைமையினால் தொழில் வழங்கும் நிலையங்கள் பல அழிந்துள்ளன.

அர்த்தமற்ற இந்த யுத்தத்தினால் பொதுமக்கள் உட்பட சகல தரப்பினரும் அழிந்துகொண்டிருக்கிறார்கள். கொழும்பில் சொகுசு வாழ்க்கை நடாத்திக்கொண்டும், குளிரூட்டப்பட்ட அறையிலிருந்தும் சில தமிழ் குழுக்கள் அர்த்தமில்லாத அறிக்கைகள் விடுகின்றன. வடக்கு- கிழக்கில் என்னதான் நடந்தாலும் தமிழ்மக்களும், முஸ்லீம் மக்களும் பலம் வாய்ந்த இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்பாதவரை இந்த மக்களுக்கு பாதுகாப்பில்லை -அம்பாறை விவசாயிகள் சம்மேளனம்.

10.05.91 வீரகேசரி

பொல்காவலையில் 5 வாலிபர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர். இவரின் சடலங்களும் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையிலும், வாய்கள் கட்டியபடியும் எரியுண்ட நிலையில் வீதியில் போடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு நகரிலும், அதன் அயற்பகுதிகளிலும் மர்மக் கொலைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

11.05.91 வீரகேசரி

கிழக்கு மாகாணத்தில் புலிகள் அரசுடன் ஆரம்பித்த யுத்தத்தில் முஸ்லீம்களைத் தம்முடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளத் தவறினார்கள். இதனால் அரசு கிழக்கில் தனது இராணுவ பலத்தை அதிகரிக்கவும், அப்பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டிக் கீழ் எடுத்துக்கொள்ளவும் வசதியான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. தூரதிருஷ்டியற்ற நோக்குடன் முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நோக்கங்களுக்கு உதவின. முஸ்லீம்கள் விரும்பியோ, விரும்பாமலோ தங்களை பாதுகாக்க அரசை நாடவேண்டியேற்பட்டது. இந்நிலைமை இனவாத அரசுக்குச் சாதகமாகவும், தமிழர்களுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் பாதகமானதாகவும் அமைந்தது - யாழ் முஸ்லீம் அகதிகள் புனர்வாழ்வுச் சங்கம்

புலிகளுக்கிடையே உட்பூசல் ஏற்பட்டுள்ளது. யாழ் பொறுப்பாளர் - டொமினிக் உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். மாத்தயாவின் - நெருங்கிய ஆதரவாளர்களான ஆஞ்சநேயர், பானு ஆகியோர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். ரஜனி திராணகமவின் கொலைக்கு காரணமாகவிருந்த செங்கதிர் என்பவரும் கொல்லப்பட்டுள்ளார்.

13 வயதுச் சிறுவர்கள் புலிகள் இயக்கத்தில் பலாத்காரமாக சேர்க்கப்பட்டு வருகின்றனர். அண்மையில் கோண்டாவிலிலுள்ள புலிகளின் அலுவலகத்தை முற்றுகையிட்ட பெற்றோர் தமது குழந்தைகளை விடுவிக்குமாறு கோரினர்.

புலிகளுக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்வதாகக் குற்றம் சுமத்தி அக்கரைப்பற்று தமிழ்ப்பகுதியிலுள்ள சில்லறைக் கடைகளை அதிரடிப்படையினரும், பொலிசாரும் மூடவைத்துள்ளனர்.

13.05.91 வீரகேசரி

வடக்கு- கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஆளும் கட்சியான ஐ.தே.க பெரும்பான்மை வெற்றியடைந்துள்ளது.

அக்கரைப்பற்றில் 2 தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தலுக்கென தளர்த்தப்பட்ட பல அவசரகாலவிதிகள் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதன்படி அனுமதியின்றி ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தவோ, ஆர்பாட்டங்களில் ஈடுபடவோ தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிசாரோ அன்றி படையினரோ உரிய அதிகாரமின்றித் தேடுதல் நடத்தவும், கைது செய்யவும், தடுத்து வைக்கவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

14.05.91 வீரகேசரி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே.க.வுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தமைக்காக ஈ.பி.டி.பி. நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் 3 தமிழர்கள் அரசபடைகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

15.05.91 வீரகேசரி

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தினரின் தேடியழிக்கும் நடவடிக்கையில் 250க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

விலங்கு வேளாண்மையையே நம்பி வாழுகின்ற 25ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும், மீன்பிடியையே நம்பி வாழுகின்ற 15ஆயிரம் குடும்பங்களும் முல்லைத்தீவில் ஒருநேரக் கஞ்சிக்கே வழியில்லாத அகதிகளாகியுள்ளனர். குழந்தைகளுக்கான பால்மா வாங்குவதற்குக்கூட இக்குடும்பஸ்தர்களிடம் பணமில்லை.

உலகவங்கி, கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகள் பல எமக்குக் கடன்களும், நன்கொடைகளும் வழங்கியுள்ளன. ஆனால் இவற்றை நாம் அபிவிருத்திக்குப் பயன்படுத்தவில்லை — போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர்

16.05.91 வீரகேசரி

மாவிட்டபுரத்தில் ஒருவரும், வசாவிளானில் நால்வருமாக 5 தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் — கொல்லப்பட்டுள்ளனர்.

திக்குவெல்லைப் பொலிசார் சிவில் உடையில் பள்ளிவாசல்களுக்குள் புகுந்து தொழுதுகொண்டிருந்தோரை மிருகத்தனமாகத் தாக்கி, பள்ளிவாசல் தளபாடங்களையும் நொருக்கியுள்ளனர். அத்துடன் வீடு வீடாகஅத்துமீறிப் பிரவேசித்து அப்பாவி முஸ்லீம்களைத் தாக்கியுள்ளனர்.

இலங்கையில் மோதல்களை நிறுத்தி அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக நோர்வேயில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

17.05.91 வீரகேசரி

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் 200 இற்கு மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

மடு அகதிமுகாமுக்கான சகல உதவிகளும் தடைப்பட்டுவிட்டன. சுகாதாரக்கேடாலும், இட நெருக்கடியினாலும் நோய்வாய்ப்பட்டு மருத்துவவசதியின்றி அல்லல்பட்ட இந்த அகதிகள் இன்று உணவுகூட இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

18.05.91 வீரகேசரி

மேலதிக ஊர்க்காவற்படையினருக்கு கொடுப்பனவு, பீரங்கி ஏற்றிச் செல்லும் கப்பல், கடலோரத் தாக்குதல்படைகள், படகு ஆயுதங்கள், வெடிகுண்டுகள், விமான உதிரிப் பாகங்கள், வெடிப் பொருட்கள், றொக்கற்றுகள் ஆகியவை கொள்வனவு என்பவற்றுக்காக 291கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையைகுறைநிரப்புப் பிரேரணைகள் மூலம்பெற பாதுகாப்பமைச்சு தீர்மானித்துள்ளது.

தொற்றுநோய்களால் ஒருசில தினங்களுக்குள் 5பேர் மடு அகதிமுகாமில் உயிரிழந்துள்ளனர்.

அக்கரைப்பற்றிலிருந்து கொழும்புக்கு இ.போ.ச பஸ்ஸில் பிரயாணம் செய்த தமிழ் அகதிகள் 8ஆம் கட்டைத் தடைமுகாமில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். மூவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

19.05.91 வீரகேசரி

வவுனியா-யாழ் வீதியில் ஓமந்தைக் கருகிலுள்ள கொக்குவெளி இராணுவத் தடைமுகாமிபடையினரால் பல

ப்படுத்தப்பட்டு வருவதையிட்டு வட பகுதியிலிருந்து வவுனியா வருவோர் சுற்றுவழிப்பாதையையே தொடர்ந்து உபயோகிக்கவேண்டியுள்ளது. இதன்காரணமாக 5மைல் தூரத்தை நடந்தே கடக்கவேண்டும்.

20.05.91 வீரகேசரி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தின் தேடியழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இதில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 2,500 தமிழர்கள் கைது செய்யப்பட்டு கஞ்சிக்குடி இராணுவமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளி ஒருவர் பிரசவத்திற்காக இரத்தினபுரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பிரசவத்தின்போது குழந்தை இறந்துவிட்டது. அப் பெண் தொழிலாளியின் ரிக்கற் வெட்டுவதற்கு டொக்ரர் 600ரூபா கேட்டுள்ளார். இதனால் அத் தொழிலாளி இரவோடிரவாக மருத்துவமனையை விட்டுப் போய்விட்டார்.

21.05.91 வீரகேசரி

மட்டக்களப்பில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் 15 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையில் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட 4 இளைஞர்களில் இருவரின் சடலங்கள் கண்கள் குத்திக் காயப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பிணமாக மீட்கப்பட்டுள்ளன. கடத்தப்பட்ட ஏனைய இருவருக்கும் என்ன நடந்ததென்று தெரியவில்லை.

22.05.91 வீரகேசரி

திருகோணமலை மாவட்டத்தில் பாரம்பரியமாகத் தமிழர்கள் வாழ்ந்துவரும் பகுதிகளில் திட்டமிட்டமுறையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்துக்கோவில்களுக்குச் சொந்தமான காணிகளும், சாம்பல்தீவுப் பகுதிகளும் சிங்களமக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

உப்புவெளியிலிருந்து 58 முஸ்லீம்களை வெளியேற்றிவிட்டு அவர்களது வசிப்பிடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் முயற்சி நடைபெறுகிறது.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 2 ஆயிரம் அப்பாவிப் பொது மக்கள் இராணுவத்தினரால் பணயமாகக் கஞ்சிக்குடிச்சாறு காட்டுப் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்

பசறைத் தமிழ் மகாவித்தியாலயத்தில் அகதிகளாகத் தங்கியிருக்கும் மொனராகல தோட்டத் தொழிலாளர்கள் தமது பழைய இடங்களுக்கு திரும்ப மறுத்துவருவதால் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பங்கீட்டு உணவுப்பொருட்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த மாதத்துடன் இவர்கள் பத்தாவது முறையாக தாக்கப்பட்டுள்ளனர். கடைசித் தாக்குதலில் 16 காம்பராக்களைக்கொண்ட தொழிலாளர்களின் குடியிருப்பு எரிக்கப்பட்டு, தமது உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் இவர்கள் அகதிகளாகியுள்ளனர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் கட்டப்பட்டு பின் புனரமைக்கப்படாத எல்கடுவையிலுள்ள லயன்களின் கூரைகள் பழுதடைந்த நிலைமையில் மானைப்புல்லினால் மூடப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் இந்த லயன்கள் நிறையத் தண்ணீர் நிரம்பிவிடுவதால் இங்குள்ள தொழிலாளர்கள் அயலவர்களின் வீடுகளிலேயே காலங்கழிக்கின்றனர். இத் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சுவதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறது.

23.05.91 வீரகேசரி

ராஜீவின் கொலையில் புலிகளுக்கு தொடர்பேதுமில்லை என்பது நிச்சயம் என பிரிட்டனிலுள்ள புலிகளின் பேச்சாளரான அன்டன்ராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நலனில் பெரும் அக்கறைகொண்ட ராஜீவ் மறைந்தது குறித்து தமிழினம் தாங்கமுடியாத துயரத்தில் மூழ்கியுள்ளது ராஜீவின் மறைவு இந்தியவுக்கு மட்டுமல்ல உலகுக்கே பேரிழப்பாகும் தமிழரின் நல்வாழ்வை விரும்பிய நல்வாழ்வைச் சிந்தித்த அந்தப்பெருந்தகையின் மறைவு குறித்து நாம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்– த.வி.கூ.

நவபாரதத்தின் தலைசிறந்த தள

பதியான மறைந்த தலைவர் ராஜீவின் படுகொலை பற்றிய செய்தி மலையக மக்கள் அனைவரையும் - பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்தியாவில் ஒரு ஸ்திரமான ஆட்சியை நிறுவுவதற்காக அயராது பாடுபட்ட ஒரு மாபெருந் தலைவரைகொலைசெய்தது மூலம் அரசியலில் பழி தீர்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையான தேசத்தின் தியாகபரம்பரையை அடியோடு அழித்து விட்டது மூலம் அவர் நாட்டுக்குச்செய்த சேவையையும், தியாகத்தையும் ஒருபோதும் அழித்துவிட முடியாது- இ.தொ.கா.

நிர்க்கதியற்ற இலங்கைத் தமிழரின் அரசியல் நெருக்கடி ராஜீவின் தலையீட்டால் மீண்டும் புதுத்திருப்பம் அடையும் என்று எதிர்பார்த்திருந்த இவ்வேளையில் இவரது இழப்பு இலங்கைத் தமிழர்கள் மத்தியில்பெரும் கவலை தருவதாகவுள்ளது-ம.ம.மு

40 வருடங்களாகத் தீர்க்கப்படாமலிருந்து வரும் வடக்கு- கிழக்குத் தமிழ்மக்களின் பிரச்சினைகளில் ஏதாவது சில உரிமைகள் கிடைப்பதற்கு ராஜீவே காரணம். இந்தவேதனைமிகு துர்ப்பாக்கிய சம்பவம் நிகழாதிருந்தால் இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அவரது பாரிய பங்களிப்பும் கிடைத்திருக்கும். அவரின் இழப்பு இந்தியாவுக்கு மட்டுமன்றி இலங்கைத் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்- த.கா.

ஏகாதிபத்திய சக்திகளினால் கோழைத்தனமாக, குள்ளத்தனமாக திட்டமிடப்பட்டு இரக்கமற்ற படுகொலையினால் அகில அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட ராஜீவ் இலங்கை மக்களின் உண்மையான நண்பன். இன, மத, மொழி பிராந்திய வேறுபாடுகளுக்கு அப்பால் அகிலமெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஒலித்த குரல் நிரந்தரமாக மௌனமாக்கப்பட்டுள்ளது - ரெலோ

மனித குலத்தின் துயரத்தை தனது துயரமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய வளர்ந்துவரும் உயர்ந்த தலைவர் ஒருவரை உலகம் இழந்து விட்டது. ஈழத்தவரான நாம் எமக்காக கவலைப்படக்கூடிய உண்மையான நண்பர் ஒருவரை இழந்துவிட்டோம்- ஈ.பி.ஆர்.எல்.எவ்

தெற்காசிய நாடுகளின் சமாதானத்திற்கும், உறுதியான நிலைப்பாட்டிற்கும் ராஜீவின் மறைவு ஒரு பேரிழப்பாகும். இந்தியாவில் ஜனநாயகத்திற்காகவும், இன, மத, வெறியர்களுக்கு எதிராகவும் போராடும்முற்போக்கு சக்திகளுக்கு இந்த நிகழ்வு பெரும் இழப்பாகும்-புளொட்

அம்பாறையில் வயலில் வேலைசெய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 9 முஸ்லீம்கள் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் 25 தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

24.05.91 வீரகேசரி

பலத்த நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ராஜீவ் படுகொலை கண்டனத்திற்குரிய ஒன்றாக அமைந்துள்ளது. இவரது இழப்பு இந்தியமக்களுக்கும், சர்வதேச சக்திகளுக்கும் பேரிழப்பாகும் - ஈரோஸ்

முழு இந்தியாவுமே மாபெரும் தலைவரை இழந்துள்ளது. உலகம்போற்றும் சமாதான விரும்பியை, நேர்மைமிக்க தலைவரை கோரத்தனமாக படுகொலை செய்தவர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - ஈ.என்.டி.எல்.எவ்

இலங்கை ஒரு விசுவாசமான நண்பரை இழந்துவிட்டது-பிரேமதாசா

24.05.91 தாயகம்

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 45 தமிழர்கள் கழுத்து வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 15பேர் இளம் பெண்கள். இந்தக் கொலைகளுக்கும் இது போன்ற கொலைகளுக்கும் 2 குழுவினர் பொறுப்பாக இருந்து வந்துள்ளனர். ஒரு குழுவினர் முனாஸ் என்பவர் தலைமையில் இயங்கும் குற்றத் தடுப்பு மற்றும் இராணுவப்புலனாய்வுத் துறையினர். மற்றக் குழுவினர் மோகன் குறூப் எனும் புளொட் குழுவினர். இவர்கள் மட்டக்களப்பு பயணியர் வீதியிலுள்ள காட்டிலா அலுவலகத்துள் முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். இப்புளொட் குழுவினரே கல்முனை, அக்கரைப்பற்றுப் பகுதிகளில் பிக் அப் வாகனங்களுக்காவும், கார்களுக்காகவும்

முஸ்லீம் குடும்பங்களைக் கொலை செய்தவர்கள் ஆவார். இக் குழுவும் இராணுவப் புலனாய்வுத்துறையின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குகிறது. இதுவரை இவர்களால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் மாணவர்களும், பெண்களுமே. புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் ஒவ்வொருவரையும் விடுவிப்பதற்கு ஒவ்வொரு நபருக்கும் ஒரு இளம் பெண் வீதம் சப்ளை பண்ணவேண்டும் என்று முளாஸ் கேட்டுக்கொண்டதாயும், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இளம் பெண்களைக் கைது செய்வதும் அவர்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியபின் கழுத்து வெட்டிக்கொல்வதுமாக இக் கொடுமைகள் — தொடர்கின்றன.

காத்தான்குடி முஸ்லீம்களுக்கு மரண தண்டனை, ஏறாவூர் முஸ்லீம்களுக்கு மொட்டையடிப்பு, ஓட்டமாவடி முஸ்லீம்களுக்கு விசாரணை எனும் வாசகங்கள் தற்போது மட்டக்களப்பில் புலிகளால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

கொழும்புக்கு அருகிலுள்ள ஆறு ஒன்றில் 9 ஆண்களினதும், ஒரு பெண்ணினதும் முண்டங்கள் காணப்பட்டன.

25.05.91 வீரகேசரி

சகல இலங்கைத் தமிழரையும் உடனடியாகத் திருப்பியனுப்புவதற்குரிய வேண்டிய நடவடிக்கையை இந்திய மத்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் — ஜெயலலிதா

இலங்கைத் தனிநபர் ஒருவர் கூட இங்கிருக்கக்கூடாது — இராம மூர்த்தி

கலிபோர்னியாவில் பிரசுரமாகும் இந்தியா வெஸ்ட் என்ற இந்தியசஞ்சிகைக்கு தான் புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொண்ட இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி மூலம் தொடர்பு — கொண்டு ராஜீவைக் கொலை செய்தது தனது குழுவினரே எனக்கூறியுள்ளார்.

27.05.91 வீரகேசரி

வடபகுதியில் 3 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவின் படுகொலையைக் கண்டிக்கின்றோம். வித்தியாசமான அரசியல் கொள்கைகளையும், நடைமுறைகளையும் கொண்டிருப்பவர்களைக் கொலைசெய்வது மேற்கத்தைய நாடுகளில் தோன்றியிருப்பினும் அந்நாடுகளில் தற்போது அவை அருகிவிட்டன. ஆனால் மேற்கத்தைய குப்பைகளின் இறுதி வாழிடமாக மாற்றப்பட்டுள்ள மூன்றாம் உலக நாடுகளில் அரசியல் தனிநபர் படுகொலைகள் நாளாந்த வாழ்க்கை முறையாகிவிட்டன — புதிய ஜனநாயகக் கட்சி

26.05.91 வீரகேசரி

ராஜீவின் கொலையையடுத்து தமிழ் நாட்டில் இதுவரை 100க்கு மேற்பட்ட புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இலங்கைத்-தமிழ் இளைஞர்களைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. அகதி முகாம்களிலும் தீவிர தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டதுடன், அகதிகள் முகாம்களைவிட்டு வெளியேறாதவாறும், யாரும் உட்புகாதவாறும் பொலிஸ் கண்காணிப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

28.05.91 வீரகேசரி

இலங்கை விமானப்படைக்கு 2எஸ்.ரி-5 ஜெட் போர் விமானங்களை வழங்கியிருக்கும் சீனா இவ் வருட இறுதிக்கு முன்பதாக 4 எம்-7 இடைமறிப்பு விமானங்களையும் விநியோகிக்கவிருக்கின்றது.

தாண்டிக்குளத்திற்கும் நொச்சிமோட்டைக்கும் இடைப்பட்ட சுற்று வழியால் நடந்துவந்த ஒருவர் பசிக்களையினால் மயங்கிவிழுந்து பின்உயிரிழந்துள்ளார். சில தினங்களுக்குமுன்னரும் இதேபோல் நடந்து வந்த ஒரு வயோதிபர் பலவீனமடைந்து உயிரிழந்தார்.

29.05.91 வீரகேசரி

இந்தியாவின் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற ராஜீவ் தான் மீண்டும் பதவிக்கு வந்தால் புலிகளுக்கு உதவுவதாக உறுதியளித்திருந்தார். ராஜீவுக்கும், புலிகளுக்குமிடையே — மார்ச்சில் ஏற்படுத்தப்பட்ட உறவை விளங்கிக்கொள்ளாதவர்கள்மாத்திரமே கொலை விவகாரத்தை திசைதிருப்ப முயல்கின்றனர் —மு.கருணாநிதி.

குறைச்சுருட்டை உள்ளிளுத்துக் கொண்டிருந்த பெருமான் கிழவன், இருளைக் கிழித்துக் கொண்டு சவம் எரிக்கும் பிட்டிக்கருகில் வந்து நின்ற வானைக் கண்டதும் புகையை வெளிவிடாமல் புகையை உள்ளுக்கு விழுங்கினான்.

வானிலிருந்து நாலைந்துபேர் குதித்தார்கள். வானின் பின்பக்க கதவு திறக்கப்படுவது நிசப்தத்தைக் கிழித்தது.

கிழவனுக்கு இதயம் வாலையம்மன் கோவில் பேயாட்டத்தில் அடிக்கும் உடுக்குப் போல் அதிர்ந்தது. கட்டியிருந்த கோவணத்தின் மேலால் மாலில் தடியில் போட்டிருந்த சாரத்தை எடுத்து கை பதற உடுத்தான். படபடவென்று எரியும் அடுப்பை நூத்தான்.

எரிகொள்ளிகளை சாம்பலுக்குள் புதைத்தான். மாலுக்கு முன்னால் சையிக்கிள் நின்றது ஞாபகம் வந்தது. இண்டைய நாளாய்ப் பார்த்து கிழவனையும் பெரிய தம்பியையும் தவிர யாரும் தொழிலுக்கு வரவில்லை. வலையைக் கடலில் வளைத்துவிட்டு வள்ளத்தைக் கரையொதுக்கிவிட்டு வயித்துக்கை குத்துதெண்டுபோட்டுப் பனங்கூடல் பத்தையுக்கை ஒதுங்கின பெரிய தம்பியை இன்னும் காணவில்லை.



கிழவன் பார்வையை சவம் எரிக்கும் பிட்டியின் பக்கம் செலுத்தினான். கடற்கரையிலிருந்து நூறு கடவை தூரம் இருக்கும். பிட்டிக்கு அருகில் பூவரச மரம் தலைவிரித்த அசுரன் போல் நின்றது. சவம் எரிக்க வருபவர்கள் கருவாடாகாமல் நிழல் காய கட்டிய கட்டிடம் வயதாகி உடைந்து இருளோடு இருளாய் இரவுக்குப் பயம் சேர்த்தது. கடற்கரைக் காற்று வறண்டு வீசியது. வானத்தில் நட்சத்திரங்கள். தூரத்தே சுடலை வயிரவரின் மூலஸ்தான அகல் விளக்கு மினுமினுத்தது. எங்கிருந்தோ வயிரவரின் வாகனம் ஊளையிட்டது.

வானில் இருந்து இறங்கிய நாலைந்து பேர்களும் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். வானுக்குள் இருந்து வட்டவட்டமான ரயர்களை இழுத்தார்கள். நாலைந்து காட்டு விறகுத்தடிகளை பிட்டியில் அடுக்கினார்கள். வானிலிருந்து மேலும் எதையோ இழுத்தார்கள். உடல்கள்.. மனித உடல்கள் ரத்தம் ஒழுகியபடி.. உறைந்த இரத்தத் திட்டுக்கள் பொட்டுப்பொட்டாய்.. கோரமாக முகம் கிழிக்கப்பட்ட உடல்கள் ஒன்று.. இரண்டு.. இருபது இருக்கும். ஒன்று இரண்டு உடல்கள் துடித்தன.

முனகல் சத்தம் ம்..ம் இன்னும் முழுமையாக உயிர் போகவில்லை. பேயறைந்தவன் போலானான் கிழவன். சுடுதாச்சி எண்ணையில் போட்ட உயிர் மீனாட்டம் இதயம் துடித்தது. ஓங்கி அலறவேண்டும் போலிருந்தது. வாய்வரை வந்த குரல் வெளியில் வர மறுத்தது. முருகா.. செல்லச்சந்நிதியானே..

என்ன கொடுமை ஆர் சுமந்து வயிறு நோகப் பெத்தாளவையோ?. அரையும் குறையுமாக அசுரத்தனமா..

கிழவனால் மேலும் சிந்திக்க முடியவில்லை. சுற்றும் முற்றும் பயத்தோடு பார்த்தான். கொட்டிலை விட்டு வெளியே குனிந்தபடி வந்தான். தரையோடு தரையாய் படுத்த கிழவன் ஊரத் தொடங்கினான். தன்னைக் கண்டாலும் கொண்டு போடுவாங்கள் எண்ட பயம்.. படுத்திருந்தபடியே பார்வையால் அந்த இடத்தை நோட்டம் விட்டான்.

காட்டுத்தடி விறகுகளுக்கு மேல் ரயர்கள் அடுக்கப்பட்டது. அதற்குமேல் உடல்களை இழுத்துக் கொண்டு போய் போட்டார்கள்.பெற்றோல் ஊத்தப்பட்டது. வேள்விக்குத் தீ வைப்பது போல் நெருப்பைப் பற்ற வைத்தான். நெருப்பு சுவாலை பெரிய ஆதிசேச பாம்பாக படம் விரித்தது... புகை கிளம்பியது. நெருப்பில் வெந்து கொண்டே முனகிய வண்ணம் ஒரு உருவம் எழும்பியது. மனித தீப்பந்தம் தீயிலிருந்து எழும்பியதுபோல்.. அலறல் சத்தம் காதைப்பிளந்தது. அதற்காகக் காத்திருந்தவன் போல் கையில் வைத்திருந்த பொல்லால் ஒருவன் தலையில் போட்டான். முனகியபடி தீயோடு தீயாய் அந்த மனித உடல் கரையத் தொடங்கியது.

கிழவன் பிட்டியைப் பார்த்தபடி பனங்கூடல் பத்தையை நோக்கி ஓடினான். தொடர்ந்து ஓடமுடியவில்லை. மூச்சு வாங்கியது. கால் நடுங்கியது. உயிர்பயம் உடலுக்கு உரம் தந்தது. சாரத்தை ஈச்சம் முட்கள் கிழித்தன. தீடீரென்று கால் தடக்கி விழுந்தான். வாய் குழறியது. மரணம் கண்ணில் தெரிந்தது.

"அப்பு சத்தம் போடாதையணை"

"பெரியதம்பி..நீ..நீ

பெரியதம்பி பத்தைக்குள் நடுங்கிக் கொண்டிருந்தான். கிழவன் மூச்சை நிதானமாக விட முயற்சித்தான்.

"அப்பு இப்பிடிப் பத்தையுக்கை பதுங்கணை.."

"எழும்பஏலையில்லை பெரியவன். நாரி நோகுது.."

பெரியதம்பி கிழவனைக் கைகுடுத்துத் தூக்கி விட்டான். இருவரினது கைகளும் நடுங்கின. ஒருவரின் மூச்சு மற்றவருக்குக் கேட்டது.

"பார்த்தியடா பெரியவன்.. பாவங்கள் சின்னஞ்சிறு வயசிலை.. நாசமத்துப் போவாங்கள்."

சொற்கள் ஆவேசமும் பயமும் கலந்து உடைந்தவாறு வெளி வந்தது.

"அப்பு சத்தம் போடாதையணை. காத்து அவங்கடை பக்கம் வீசுது. காதிலை குரல் கேட்டா கொண்டு போடுவாங்கள்."

அப்பு முருகனைக் கூப்பிட்டார்.

"முருகா இதையெல்லாம் நீ பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய். உலகம் அழியப் போகுதோ தெரியேல்லை."

"அப்பு அதில ஒரு பெடியனை எனக்குத் தெரியுமணை"

"என்னடா சொல்லுறாய்"

"ஓமணை காது வெட்டிச்

செல்லத்துரையின்ரை மகனும் சேர்ந்துதான் வானிலை வந்தவன். அவன்ர நடையில நான் பிடிச்சுப் போட்டன்."

"பெரியவன் வாடியப்பு வீட்டை போவம்"

"கடலில வலை வளைச்சுக் கிடக்குதணை"

"அது பிறகு பாக்கலாம் முதலிலை வீட்டை போய்ச் சேருவம்"

பெரியதம்பி மாலில் நின்ற சைக்கிளை மெல்லப் பத்தைகளால் உருட்டிக் கொண்டு வந்தான். கிழவனைப் பின் கரியரில் உக்கார வைத்துவிட்டு சைக்கிள் பெடலை ஓங்கி உழக்கினான். சுடலை வயிரவரின் மூலஸ்தான விளக்கு அப்போது அணைந்திருந்தது.

நடுச்சாமத்தில் வந்து படுத்த கிழவன் சூரியன் உச்சிக்கு வந்தும் எழும்பவில்லை. உடல் வெக்கை தள்ளியது. பொன்னாச்சிக் கிழவி துடிதுடித்துப் போய்விட்டாள்.

"அடி அம்மாளாச்சி இந்தக் காச்சல் காயுது. எணை அப்பு என்னணை செய்யுது".

பெருமான் கிழவன் கண்ணைத் திறந்து பார்த்தான். வாய் திறக்கப்பயம். கூரையின் மூலையில் சிலந்தி வலை படர்ந்திருந்தது.

"என்னணை அப்பு, பேசேணணை உடம்புக்கை என்ன செய்யுது? சொன்னால்தானே நான் ஏதாவது செய்யலாம்."

பக்கத்து வீட்டிலை புளியம் சருகு கூட்டிக் கொண்டிருந்த கமலம் விளக்குமாறை மட்டை வேலியில் சாத்திவிட்டு பொன்னாச்சியைக் கூப்பிட்டாள்.

"பொன்னாச்சி பொன்னாச்சி உனக்கு விசயம் தெரியுமே"

மற்ற நேரங்களில் கமலம் கூப்பிட்டிருந்தா இந்நேரம் பொன்னாச்சி வேலி கடந்திருப்பா. இப்பவோ

"என்னடி கமலம் மனிசர் படுகிற பாட்டிலை நீயொருத்தி, என்ன விசயம்?"

"என்னாச்சி அலுப்புக் கொட்டிறாய், ஏன் அப்பு பேசிப் போட்டுதே இல்லை அப்பு உன்னை விட்டுவிட்டு ஆரையும் லவ் வடிக்குதோ"

கமலத்தின் கிண்டல் பேச்சு ஆச்சிக்கு எரிச்சலைத்தந்தது.

"என்ன விசயமெண்டு சொல்லடி?"

அதாச்சி உவன் பெரியதம்பி கடலுக்கு போட்டு வந்து பேய் பிடிச்சவன் மாதிரி இருக்கிறானாம்!"

"என்னது கோதாரிக்கதை கதைக்கிறாய்? இஞ்சையும் அப்பு முகட்டைப் பார்த்து யோசிக்குது."

"பெரியதம்பி வீட்ட போன குஞ்சாச்சி சொன்னவ அவனுக்கு கொள்ளிவாய்ப்பேய் அடிச்சிருக்குமெண்டு ".

ஆச்சிக்கு மனசு கிடந்து அடித்தது. அப்புவுக்கு அப்பிடி இப்பிடி ஏதாவது நடந்திருக்குமோ? எத்தினை வருசமா கடலிலை போகுது. எத்தினை செய்வினை சூனியங்களைக் கண்ட மனிசன். அப்பிடி இருக்காது என்று மனம் சொன்னது.

பின்னேரம் போல் கிழவனின் காச்சல் இறங்கியது. ஆனால் கதை ஊரெங்கும் பரவி விட்டது. நேற்றிரவு சுடலையில் நடந்ததை மனதுக்கை வைக்க முடியாமல் பெரிய தம்பி கொட்டிப் போட்டான். அதன் பிறகுதான் அவன் அலட்டலை நிப்பாட்டினான். எனினும் இடைக்கிடை அலட்டல்.

"ஐயோ அவன்கள் என்னையும் கொண்டு




போடுவாங்கள்"

எரித்து கொண்டு எழும்பிய உருவம் அவன் முன்னே எழுந்து வருவது போல் அலறுவது போலிருந்தது.

"அங்க பாருங்கோ நெருப்பு, எழும்பிறான், அலறுறான், அவன்ர மண்டையில யாரோ அடிக்கிறாங்கள்.. ஐயோ அவன் என்னையும் கூப்பிடுறான்".

வீட்டு முற்றத்தில் சனம் கூடிவிட்டது. பெரியதம்பியின் பெண்சாதி நிறைமாதப்பிள்ளைத்தாச்சி.

"இந்தப் பிள்ளை தங்கின காலம் தொடக்கம் இவருக்கு காலம் சரியில்லை" என்று ஒப்பாரி வைத்தான். ஊர்சந்தையில் பெண்டுகளும், கோவில் முலைகளில் கடதாசி விலையாடுபவர்களும், குமர் பெட்டையள் வேலியோரத்திலும், இளந்தாரிப் பெடியள் வீடுகளிலும் கதையை விவாதிக்கிறார்கள்.

படுக்கையை விட்டு எழும்பிய கிழவன் மனதில் எண்ணம் ஒடியது. உவன் காது வெட்டிச் செல்லத்துரையின்ரை மகனைப் போய்ப் பார்த்தா என்ன? அவனும் என்ர இனத்தவன்தானே. கிணத்தடியில் முகத்தை அலம்பிக் கொண்டு துண்டைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு காது வெட்டியின்ர வீட்டை நோக்கி ஒழுங்கையால் நடந்தார் கிழவன்.

அங்கு போனதும் தான் தெரிந்தது அவன் இருப்பது பேத்தை மாணிக்கத்தின்ர வீட்டிலையாம். இயக்கத்திறகுப் போனதில இருந்து வீட்டுக்கு வாறது குறைவாம். கோவிலடி வீதியால் திரும்பி வாசிகசாலையைத் தாண்டி நாரியைப் பிடித்தபடி பேத்தை மாணிக்கம் வீட்டை நோக்கி நடந்தார். கால் வேறை வலித்தது. இதென்ன விசர்வேலை என்று மனதில் பட்டது. ஆனாலும் தன் எண்ணத்தைக் கைவிடவில்லை.

மாணிக்கத்தின் வீட்டுப் படலை கயிறு போட்டுக் கட்டியிருந்தது.வேலியால் எட்டி உள்ளுக்குள் பார்த்தார். முற்றத்தில் நின்ற சீமைக்கிளுவையில் இரண்டு சைக்கிள் சாத்தி நின்றது. கயிற்றை அவிட்டுக் கொண்டு உள்ளுக்குள் போனார். வீட்டிற்குள் சத்தம் கேட்டது. பேத்தை மாணிக்கரைக் காணவில்லை.

யன்னலால் உள்ளுக்குள் நோட்டம் விட்டார். காது வெட்டியற்றை மகன் சிவா நிறைவெறியில் நின்றான். அவன் முன்னால் சாராயப் போத்தல் அடுக்கப்பட்டிருந்தது. சிவாவிற்குப் பக்கத்தில் நின்றவனை அடையாளம் தெரியவில்லை. கிழவனுக்கு கண்ணை நம்பமுடியவில்லை. உந்தப் பெடியனெல்லாம் உப்பிடித் தண்ணி போடுவானோ எண்ட நினைப்பு.

"டேய் சிவா என்னடா உந்தக் குடி குடிக்கிறாய். குடல் வெந்து சாகப்போறாய்?."

"ஒமெடா நான் சாகத்தான் போறன். என்னாலை அய்யோ தாங்க முடியலையடா. ஐயோ! " நிறை வெறியில் கத்தினான்.

"என்னடா; இதுக்காக இப்பிடியே குடிக்கிறது"

"என்னடா சின்ன விசயமாய் சொல்லுறாய். சின்னச் சின்னப் பெடியளடா, அரையும் குறையுமா வைச்சு கொளுத்தினோமடா. இப்பவும் கண்ணுக்கை நிக்குதடா. அவங்கள் குளறின குளறல்.."

"அதுக்கு நாங்கள் என்னடா செய்யிறது? அவங்கடை விதிஅப்பிடி"

"இது விதியில்லையடா கொலை. திட்டமிட்ட கொலை. துடிக்கத்துடிக்கக் கொலை, அவங்களும் எங்களை மாதிரித்தானடா ஆயுதம் ஏந்தினவங்கள், ஏன்ரா நாங்கள் அவங்களைச் சுட்டோம்"

"அது அரசியலடா"

"காத்தைக்கு... அரசியல், என்னடா அரசியல், எனக்கு விளங்கேல்ல, அரசியலும் விளங்கையில்லை, வாழ்வும் விளங்கையில்லை" புளுத்த தூசனத்தால் அரசியலைத் திட்டினான்.


யன்னலால் பார்த்துக் கொண்டிருந்த கிழவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நடந்த சம்பவத்திற்கு தனக்கு மட்டும்தான் காரணம் தெரியாது என்று நினைத்த கிழவன், செய்தவனுக்கே காரணம் தெரியவில்லை என்றபோது திகைத்து நின்றான். கடலில் வளைச்ச வலை ஞாபகத்திற்கு வந்தது. வாலையம்மன் கோவிலின் முன்னால் பெரியதம்பிக்கு பேயாட்டும் சத்தம் தூரத்தில் கேட்டது.

ச. ஜீவகன்

# இது தகுமோ இதுமுறையோ

கொஹ்ஸ்ரர் (HÖXTER) மாவட்டத்திலுள்ள வாபேக் எனும் கிராமத்தில் கடந்த 13.04.91 அன்று கலாச்சார விழா ஒன்று அவ்விடத்திலிருக்கின்ற 'தமிழ் அன்பர்கள்' சிலரால் நடாத்தப்பட்டது. விழா ஏற்பாட்டாளர்கள் இம் மாவட்டத்தில் வாழ்கின்ற அனைத்து தமிழர்களினது உதவியையும், ஏதாவது நிகழ்ச்சிகள் செய்யமுடியுமானால் செய்யும்படியும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதைக் கேள்வியுற்ற இம் மாவட்டத்தில் வாழ்கின்ற சிலர் பிரச்சினைக்கு நேரடியாக முகங்கொடுத்துக் கொண்டிருப்பவர்களால் அப் பிரச்சினைகளிலிருந்து விடுபட இறுதிவரை போராடமுடியும், இப் பிரச்சினையின் மூலவேரை அகற்றுவதன் மூலமே நாம் சுதந்திரமாக வாழ முடியும் என்பதை விளக்கும் நாடகம் ஒன்றையும், கடல் கண்காணிப்புச் சட்டத்தின் மூலம் மீன்பிடிக்க முடியாமல் கஷ்டப் படும் மீனவத் தொழிலாளி ஒருவர் தனது பிள்ளை பசி தாங்க முடியாமல் கதறும் நிலையில் மீன் பிடிக்கச் சென்றபோது இலங்கை இராணுவத்தால் கடலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டு 'பயங்கரவாதி சுட்டுக் கொலை' எனப் பிரச்சாரப்படுத்தப்படும் நிலையைச் சுட்டிக்காட்டும் சிறுகதையை ஜேர்மன் மொழியில் வாசிப்பதையும் நிகழ்ச்சிகளாகச் செய்யப்போவதாகக் கேட்டனர்.



பார்வை

ஆனால் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் "அரசியல் வேண்டாம். அது பிரச்சினை. நாங்கள் கலாச்சார நிகழ்ச்சி அதுவும் ஜேர்மன்காரருக்குத்தான் செய்யப் போகிறோம். வயலின், வீணைக் கச்சேரி என்றால் வரவேற்போம்" என்று கூறிவிட்டனர்.

அப்போதுதான் தெரிந்தது இந் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் வெளிநாட்டு வீர வேங்கைகள் என்றும் இயக்கத்தை அல்லது அதன் தலைமையை பூசிக்கின்ற நிகழ்ச்சிகளை அல்லது களியாட்ட நிகழ்ச்சிகளை தவிர வேறு எதையும் இவர்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும்.

நாம் செய்யப் போவதாகச் சொன்ன நிகழ்ச்சிகள் நிராகரிக்கப்பட்டதை ஒட்டி நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கும் எமக்குமிடையே நடந்த விவாத

த்தின் பின் நாடகத்தைப் போடலாம் என்றும், சிறுகதையை அனுப்பும்படியும், அதைப் படித்து விட்டு தாம் முடிவு செய்வதாகவும் பதில் சொன்னார்கள்.

இதன்படி சிறுகதை தபால் மூலம் எமது நண்பர்களால் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் அது தமக்குக் கிடைக்கவில்லை என நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கூறினார்கள்.

இதையடுத்து நேரடியாக சிறுகதை அவர்களிடம் கையளிக்கப்பட்டபோது தாம் நிகழ்ச்சிகள் எல்லாம் தயார் செய்துவிட்டதாகவும், இனி ஒன்றும் செய்யமுடியாதென்றும் கூறினார்கள்.

எமது நாட்டில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்களை ஜேர்மென் மக்களுக்கு எடுத்துக் கூறுவதையும், எமது பிரச்சினையையும், அதற்கான தீர்வுகளையும் நோக்கிய நிகழ்ச்சிகளை விடுத்து ஆட்டமும், பாட்டமும் இன்றைய சூழ்நிலையில் தேவைதானா எனக் கேட்டபொழுது, கலாச்சாரம் என்றால் என்ன? அரசியலுக்கும் கலாச்சாரத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? என்பதை அறிய முயற்சிக்காத, உண்டியலை நிரப்புவதையே குறிக்கோளாகக் - கொண்டவர்களிடமிருந்து மௌனமே பதிலாகக் கிடைத்தது.

இறுதியில் நாம் செய்ய இருந்த நிகழ்ச்சிகள் எதுவுமின்றி வெறும் களியாட்ட விழாவாக கலாச்சார விழா நடைபெற்றது. இதை எதிர்ப்பதாகச் - சொல்லிக்கொண்ட சிலர் விழா ஏற்பாட்டாளர்கள் போட்ட எலும்புத்துண்டுக்காக விழாவுக்கு விசுவாசமாக நடந்து கொண்டார்கள்.

இலங்கையிலுள்ள மக்களின் நிலைபற்றி - மக்கள் இலங்கையரசால் மட்டுந்தான் அழிக்கப்படுகிறார்களா? அதிகாரத்துக்-கான போட்டிகளில் இயக்கங்களினால் கொல்லப்படவில்லையா?, தாம் திரட்டி அனுப்பும் நிதி எங்கு போகின்றது? எதற்கு பயன்படுகின்றது? என்பது பற்றி - யோசிப்பது காசு சேர்க்கும் வீரர்களுக்கு பிரச்சினைக்குரியதாகவிருக்கின்றது.

அரச, இயக்க அடக்குமுறைகளிலிருந்து தப்பி வருபவர்கள் தாம் அனுபவித்த அரச, இயக்க அராஜகப் போக்குளைச் சொன்னால், அவர்கள் செத்துப் பிழைத்து வருபவர்கள் என்பதை கூட மறந்து எவ்விதக் கூச்சமோ, வெட்கமோ இன்றி இவர்கள் கைக்கூலி அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சர்வசாதாரணமாக முத்திரை குத்துகிறார்கள். நாட்டில் ஒருவேளை உணவுக்கும் வழியின்றி உயிர் துறக்கும் மக்களின் உணர்வுகளை இவர்களால் புரிந்துகொள்ள முடியாது.

புலம்பெயர்ந்த நாடுகளில் எவ்வித உரிமைகளுமற்ற நிலையில் ஒருவிழாவை நடாத்தி முடிப்பதென்றால் சிரமமான

காரியந்தான். ஆனால் இவ்விழா மூலம் எதை வெளிக் கொணரப் போகின்றோம், எதைத் தெளிவு படுத்தப்போகின்றோம் என்பதில்தான் இந்தச் சிரமத்திலும் நாம் ஒரு வெற்றியை கண்டவர்களாக முடியும்.

தமிழர்களின் தாயகத்திற்காக பணம் மட்டும் தந்தால் போதும் என்றுகூறிக் கொண்டு காசைக் கரியாக்கி கலாச்சாரத்திற்காக விழா எடுக்கும் 'நிதி வீரர்கள்' மக்களுக்காக விழா எடுப்பதென்பது கடைசித் தமிழரையும் புதைக்கும் இடத்தில் புல் முளைத்தபின்தானோ?

•

நக்கீரன்

# இலங்கையில் இன்று

இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் மீதான அரசின் இன ஒடுக்கலின் விளைவாக ஆரம்பமாகிய ஈழவிடுதலைப் போராட்டம் அவ்வப்போது அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரங்கள் உட்பட விமான ஷெல் தாக்குதல்கள், தேடியழித்தல்... எனத் தமிழ் மக்களுக்கு நிம்மதியற்ற வாழ்வை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

மக்களுக்கும், போராட்டத்திற்கும் எந்தவித இணைவுமின்றி அரசினாலும், இயக்கங்களினாலும் நடாத்தப்படும் இப்போரினால் அகதி முகாம்களிலும், பதுங்கு குழிகளிலும் தம் வாழ்வை அச்சத்துடனும், விரக்தியுடனும் — நாளும் கழிக்கும் நிலையிலேயே நமது மண்ணில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இத் துயர்களுக்கு மத்தியிலும் "மக்களுக்காகவே போராடுகிறோம்" எனக் கூறிக்கொள்ளும் புலிகளினால் விதிக்கப்படும் வரிகளைச் செலுத்திக்கொண்டும், மக்கள் நலன் கருதாது அரசுடன் இணைந்து புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில் தமிழ் மக்களை அழிக்கத் துணை போகும் தமிழ் இயக்கங்களுக்கு மத்தியிலும் அங்கலாய்க்கும் மக்கள் பற்றிய உண்மை நிலையை அறியாத நிலையில் வேற்றுநாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு இயக்கங்களினால் நடாத்தப்படும் தொலைபேசி செய்தி ஸ்தாபனங்களாலும், இயக்க, இலங்கை செய்தித் தாள்களிலிருந்தும் அங்கு நடப்பவைகளின் ஒரு பகுதியை மட்டுமே அறியக்கூடியதாகவிருக்கின்றது.

இந்நிலையை மாற்றுவதற்கான முதற்படியாக "தூண்டில்" சஞ்சிகைக்குழுவினால் "வடபகுதியில் இன்று..." என்ற தகவல் நிகழ் 12.05.91இல் டோற்முண்ட் நகரில் நடாத்தப்பட்டது. உதவிப் பொருட்களுடன் வடபகுதிக்குச் சென்று 03.02.91 இலிருந்து 17.03.91 வரை இலங்கையில் தங்கியிருந்த திரு. மிகயெல் மேற்ச் இனால் சுமார் 50இற்கும் மேற்பட்ட விவரணப்படங்கள்(Dias) காட்டப்பட்டன— தமிழில் விளக்கங்களுடன்.

ஒவ்வோர் படமும் போரின் அகோர முகங்களை எம்முன் நிறுத்தின. தமது சுய வடிவங்களை இழந்திருந்த பாடசாலைகள், புகையிரத நிலையங்கள் விற்பனை நிலையங்கள், வீடுகள், பஸ் நிலையங்கள், மக்களின் தற்போதைய வதிவிடங்களாகிப் — போன பதுங்குகுழிகள் என்பன எல்லாப் படங்களையும் ஆக்கிரமித்திருந்தன.

எந்தவித அர்த்தமும் கற்பிக்கப்படாமல் இலங்கை அரசிற்கும், புலிகளுக்குமிடையில் ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெறும் யுத்தத்தினால் அழிந்து கொண்டிருப்பவர்கள் அப்பாவிப் பொதுமக்களே.

போதியளவு உணவுப்பொருட்களின்றி நித்தமும் பட்டினியோடும், எரிபொருள், மின்சாரமற்ற நிலையில் இருளிலும், போக்குவரத்தின்மை, பணமின்மை... போன்றவற்றினாலும் துன்பத்தை மட்டும் வாழ்க்கையாக்கியவர்கள் பற்றி இருதரப்பினரும் எந்தவிதத்திலும் கருத்திற் கொள்ளாதே இப் போர் தொடர்கின்றது.

எமது மண்ணில் நாளாந்தம் நிகழ்பவைகளை இருமணிநேரம் நம்முன் தெரியப்படுத்திய — போது, ஒரு கணத்தில் உணரக்கூடியதாகவிருந்த வேதனையால் இன்னும் சொந்தநாட்டிலிருந்து உயிர்ப்பிற்கான போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் நிலையை ஓரளவேனும் அறியக்கூடியதாகவிருந்தது. அப்படியிருந்தும் நாட்டுப்பிரச்சினையில் அக்கறையுள்ளவர்க

போனவும், போனவும்

"சோவியத்தும், அமெரிக்காவும் தங்களின்ரை பெரிய ஆயுதங்களை நசுக்கியும், பொசுக்கியும் மக்களுக்குக் காட்டுறதேன்?"

"பெரிய ஆயுதங்கள் வைச்சிருக்கிறது சரியான நட்டமாம். அதாலை பெரிசுகளை உருக்கி சின்னச் சின்ன ஆயுதங்கள் செய்தா எல்லா நாடுகளுக்கும் கையுக்கை குடுக்கலாமெண்டுதான் உந்த விளையாட்டு விளையாடியினம்"



கதிர்.

ள் டோற்முண்டடில் 30 பேர ளவில்தான் இருக்கிறார்கள் என பார்க்க நேர்ந்தபோது மனதி ற்கு கவலை தரக்கூடிய விடய மாகவிருக்கின்றது.

இப்படியான தகவல் நிக ழ்களை இத்துடன் நிறுத்தாதுஇது போன்ற ஏனைய நிகழ்வுகளையு ம், எமது நாட்டில் சுமுகமான நிலைமையை வரவழைக்கக்கோ ரி எதிர்ப்பு நடவடிக்கைகளையு ம் "தூண்டில்" பரவலாக எல் லா நகரங்களிலும் நடத்தவேண் டும்.

நிலாம்பரி

"தகவல் நிகழ்"

அரசு சார்பாகவும், இய க்கங்களின் சார்பாகவும் மாற் றம் பெற்றுக் கிடைக்கும் செய் திகளையே அறியக் கூடியதாக நாமிருக்கும் நிலையில் இலங்கை யில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் உண்மை வாழ்நிலையை பிரதானப்படுத்தும் தகவல்களை பரவலாக்கவேண்டிய தேவையின் அடிப்படையில் நகரங்கள் தோ றும் "தகவல் நிகழ்"களை நட த்தி வருகிறோம்.


டோற்முண்ட்டில் ஆரம் பமான முதலாவது தகவல் நிக ழ் பற்றிய பிரசுரங்களை எம் மால் பரவலாக விநியோகிக்க முடியாமல் போய்விட்டமையும் அந் நிகழ்வில் குறைந்த எண்ணி க்கையினரே கலந்து கொண்டுள் ளமைக்கான ஒரு காரணமாகும்.

இரண்டாவது தகவல்நிகழ் 26.05.91இல் விற்றன் நக ரில் நடைபெற்றபோது சுமார் 80இற்கும் அதிகமான தமிழர்க ள் கலந்துகொண்டு ஆதரவளித்த னர். தூர இடங்களிலிருந்து ஜே ர்மெனிய நண்பர்களும் வந்திரு ந்தனர்.

மூன்றாவது தகவல் நிகழ் 09.06.91இல் கிறபெல்ட் ந கரில் நடைபெற்றபோது சுமா ர் 90 இற்கும் அதிகமான தமி ழர்கள் ஆர்வத்துடன் வந்து க லந்துகொண்டனர்.

இத் தகவல் நிகழ் தொ டரை ஏனைய நகரங்களிலும் ந டத்துவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். உங்கள் ஒத்துழைப் பு எங்களைப் பலப்படுத்தும். உ ங்கள் நகரிலும் 'தகவல் நிகழ்' நடத்த விரும்பின் எமது முகவரி யுடன் தொடர்பு கொள்ளுங்கள். தற்போதைய நிலையில் நோ ர்த் றைன் வெஸ்ற்பாலியா மா நிலம் மட்டுமே சாத்தியம்.

- கடலோடிகள்



ஸ்ரேசன்கவுஸ் என்னுமோர் ஏற்றுமதித்துறை
ஸ்தாபனம் தன்னில் ஓர் பாதுகாப்புத்துறை
சேவகனாக நான் நின்றதனால் கண்ட
காட்சிகள் மனதைக் கிளறிவிட அன்று
மாதம்பிட்டியென்ற மயான பூமி பக்க
மாயுள்ள கூட்டில் இருந்து கொண்டு
வேதனை, சிரிப்பெனும் இரு துருவம் தாண்ட
வெள்ளைத் தாள் ஒன்றில் எழுதலுற்றேன்.

ஞாயிறு தினமது நாலு பக்கத்தாலும்
நல்லவர் கெட்டவர் பேதமின்றி
ஆயிரம் கோடி பணமுடையான் அன்றி
ஆட்பலம் அணிகலன் உள்ளவரும்
வாயிருந்தென்ன வயிறுவற்ற கஞ்சி
வாயார வுண்ண வழியறியார் அன்றி
சேயர் வயோதிபர் இளைஞர்களும் கூடி
சேர்ந்து மயானத்தில் வந்திருந்தார்.

அந்தந்தப் பக்கத்தில் அவரவர் கிரியைகள்
அதற்கென இடங்கள் ஒதுக்கியுண்டு.
எந்தப் பக்கம் பிணம் வருகிறதோ கண்டு
இவர்கள் யாரென்று தெரிந்திடலாம்
பந்தல்போல் விறகை அடுக்கி சுற்றி தென்னை
பச்சோலை தோரணம் கட்டிவிட்டால்
வந்திருப்போர் தமிழ் சைவரென்று நம்பி
வாதிடலாம் பிழை வராது.

சிங்களர் தமிழர் சோனகர் மலே
சிறிய இனமாம் பறங்கியர்
இங்கிவர் சாதிகள் சொல்லிவிட்டேனானால்
இவர்கள் மதத்தில் பல பிரிவு.

சிங்கள பௌத்தர் கிறிஸ்தவர் தமிழ்
இந்துக்கள் இஸ்லாமியர்கள்
அங்கிலிக்கன் ஜேர்வான் திருச்சபையாரென்ற
ஆகம பேதங்கள் எத்தனையோ.

இப்படியாய் வரும் மலமினியாவுக்கு
எத்தினை வேறு பெயர்களன்றோ.
எப்படிச் சொல்வது?மையமென்பார் சிலர்
எட்டா பிரேதம், பொடி, பிணத்தையென்பார்
அப்பிடியில்லை பூதவுடல் இறையடி சேர்ந்தவர்.
அடுத்தவர் ஜனாஸாதான் என்றுரைப்பர்.
எப்பிடிச் சொல்லி அழைத்திடினுமுயிர்
பிரிந்தபின் அது சதைப் பிண்டமன்றோ.

புதைத்தும் எரித்தும் சென்ற பின்னும் மீண்டும்
புதைத்த எரித்த இடங்களிலே
பதைக்கு முள்ளன்போடு பூசைகளும் பிற
பண்புக்குரிய கிரியைகளும் செய்து
கதைக்கு இடமின்றி தம்மால் இயன்ற
கடமை செய்தோமென்ற திருப்தியுடன்
புதைத்த இடத்திலோ அயலினிலோ நினைவு
பதாதையாய் கட்டிடம் எழுவதுண்டு.

இவற்றினை பார்த்து நான் வேதனையாய் சிரித்ததேன்?
இவையெல்லாம் இயல்பாய் மரித்தவர்க்கே.
கயிற்றினால் கட்டியும் கால் தலை யின்றியும்
களனியாற்றில் வந்து முகத்துவாரக் கடல்
கரையினில் ஒதுங்கிய எண்ணற்ற உடலுக்கு
கடமைகள் செய்தவர் யாருமுண்டோ?
கரைந்து சிதைந்து கழுத்தற்று துணியற்று
கரையில் மோதி மணத்ததன்றோ.

வடக்கு கிழக்கினில் வன்முறையால் வந்த
வகைகள் பலவுண்டு கேட்டிடுவீர்.
மடக்கி யொழிக்கும் வகையில் இளைஞர்கள்
மாயமாய் கொன்று அழிக்கப்பட்டார்.
கிடக்குது கிட்டமென அத்துலத் முதலி

கிண்டிவிட லங்கா ராணுவத்தார்
மடக்கி யழித்த இளைஞர்கள் ஆயிரம்
யாரங்கு செய்தார் கிரியைகளை?

இந்தியா புலி மோதல் காலத்திலே தொரு
எங்கனும் செல்லடி பட்டிறந்த
சிந்தை கலங்கிய மாந்தரின் உடல்
சிதறிக் கிடந்திட்ட வேளையிலே
அங்கதைக் கண்டவர் அடுக்கிவிட்டு டயர்
அவை மேல் போட்டெரித்ததுண்டு.

வெலிக்கடை சிறையினில் வேலில் தலை கொண்டு
வீணர்கள் காட்டிய குட்டிமணி தங்கத்துரை
பலிக்கடாவாகிய ஐம்பத்தியாறு பேர்
பட்டநிலை யன்று யார் அறிவர்?

இந்தியப் படையிங்கு நிற்கையில்
நிழலில் இருந்தரசோச்சி வந்த
இந்தந்தப் பெயர்களைக் கொண்ட குழுக்களால்
இறந்து தொலைந்தவர் எத்தனை பேர்.
மந்த புத்தி கொண்டோர் கொன்றனரே யவர்
மறுமுறை அவ்வுயிர் தருவாரோ?
சிந்தையில்லாதவர் செய்த தியாகங்கள்
சீர் பெறுமோ பலன்தான் வருமோ?

ஈழத் தமிழினம் ஏற்றம் பெறத் தாமே
ஈசனருளிய தூதரென்று தினம்
மீளமீளவெங்கும் சொல்லிக்கொண்டு புலி
'வீரர்கள்' செய்த கொலைகள் ஏராளம்.
வாழவைப்போம் சரணடையுங்கள் எனக் கேட்டு
வந்த அடைக்கலம் கோரியவர் எவர்
வாழவிடப்பட்டார் வந்தோர் உடல்களை
வாயால் தட்டிக் கேட்டோரும் மறைந்தார்.

இவர்களுக்கென்ன நடந்தது யாருக்கும்
இன்றுவரை தெளிவாகவில்லை.
அவர்கள் தம் தோழர்களையே கிரியையின்றி காட்டில்
அடக்கிவிட்டு மக்களைப் பேய்க்காட்டும்
சமர்த்தினை நன்கு தெரிந்துகொண்டும் வீணே
சமத்துவம் கேட்பது வீணிலையோ?

இதுவரை இறந்தோரினதும் இன்னும்
இருப்போரினதும் ஆத்மா சாந்தியடைய
இனி நாங்கள் யாரைப் பிரார்த்திக்கலாம்?
எப்போதும் நாமும் செத்து மடியலாம்?

*

சேநலிங்கன் (ஈழம்)



## வாசகர் கடிதங்கள்

தெரிந்தவையும், சாதகமானவையும் தேசத்தின் குறிப்புகள் என்ற வரையறைக்குள் நிரப்பபப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கருத்து ரீதியான அநாதைகளும் தத்துப் பிள்ளைகளாக புதியதத்துவங்களை இங்கே முழங்கலாம். மொத்தத்தில் பிரஜைகளுக்கு விஷயம் தெரிந்தவர்கள், வித்தியாசமானவர்கள் என மறைப்புகளில் பட்டமளிப்புகளும் நடக்கக்கூடும். அதே நேரத்தில் மறுபக்கத்தே கொலைகள் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். நாளை எழுதுவதற்கும் கைகள் இல்லாமல் தனியாகப் பிடுங்கப்பட்டு தெருவிலே எறியப்படும் அபாயமும் நின்று எமைப் பயமுறுத்தும். அவர்களின் மொழியில் சொல்வதானால் மனித உரிமைகள் – சாசனத்தின் நடவடிக்கைபோல் தான் பக்கங்களின் எண்ணிக்கையில் தங்கியுள்ள இந்தப் பகுத்தறிவு விளையாட்டும்.

ஒவ்வொரு யுத்தங்களும், அதன் பின்னணிகளும் நியாயமாக ஆராயப்படும்போதுதான் பின்னணிகளின் நோக்கங்கள் இருட்டை விலக்கும். ஆனால் வர்க்கச் சார்பு காரணமான செயற்பாடுகள் என சர்வதேசத் தொடர்புகள் எல்லாம் மொட்டையடிக்கப்படுகின்றன. மலேசியாவை – மையமாக வைத்து நடாத்தப்படும் கப்பல் கம்பனி, றிமோட் கொன்றோல்கள் போன்றவை புதிய உண்மைகள். இன்னும் கூட உறங்குபவை பல காலப்போக்கில் காத்தாகலாம்.

காட்டிக் கொடுக்கிற , துரோகமிழைத்தவர்களை விட்டுவிடுவோம் என ஏனைய இயக்கங்களைக் குறிப்பிடுவது துரோகத்தின் அர்த்தம் புரியாத சுயபாதுகாப்பாக இருக்கலாம் .

அரசுடன் உறவாடியபோது — கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டால் சிங்கள அரசின் உளவுப்படையுடன் வந்து எந்த இயக்கம் என்று பார்க்கின்ற அளவிற்கு புல், பூண்டுகளாக இருந்தவர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுவது வியப்புத்தான். சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து கிழக்கில் ரோந்து செய்தால் அது தந்திரோபாயம். மற்ற இயக்கங்கள் சேர்ந்தால் மட்டும் கைக் கூலிகள், துரோகிகளா? பிரஜைகளின் மதிப்பீடுகளாவது வாழட்டும்.

புலிகள் தவறிழைக்கும்ஓர் அரசியல் இயக்கம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார்கள். ஆயிரக்கணக்கில் புலிகளின் வதைமுகாம்களில் சிதைக்கப்படும் தமிழர்களும், கோட்டையில் அகாலமான ஆயிரத்தைத் தாண்டிய ஏனைய இயக்கத்தவரும் தவறிழைக்கும் ஒரு அரசியல் இயக்கமாகப் புலிகளைக் கண்டார்களா? அல்லது எஞ்சியவர்கள் எல்லோரும் ஆதரவாளர்களாக இருக்கலாம் என்ற காரணத்திற்காக இராணுவத்தின் — வெறித்தனமான வாள் வீச்சுக்கு பலியாகின்றார்களே! அவர்களாவது சுயமாகப் புலிகளை ஏற்று கொண்டவர்களா? சிங்கள அரசினால் கொலை செய்யப்பட்ட இயக்க உறுப்பினர்களின் தொகையைவிடவும், புலிகளால் கொலைசெய்யப்பட்ட தொகை ஆயிரக்கணக்கில் அதிகமாகும் என்கின்ற உண்மை எமக்குச் சொல்லுகின்ற சேதிதான் என்ன? ஆனால் முதலாளித்துவ தேசியவாதம்தான் அனைத்தையும் புரியவைக்கும் என்றும், புதிய ஒரு பாதையை தெரிவுசெய்ய வைக்கும் என்றும் பிரஜைகள் சார்பு நிலையை மறைத்து தங்களைத் தூய்மை — வாதிகள் போல காட்ட முயல்வதும் வேடிக்கையே. ஆரம்பத்தில் இயக்கங்களும் தத்துவங்கள்— தான் செப்பின.

மேலும், தவறுகள் அவர்களுடைய பலவீனங்கள். அவற்றை எதிரி பயன்படுத்தாதவிதத்தில் அம்பலப்படுத்த வேண்டும் எனவும் சொல்கிறார்கள். அப்படி அம்பலப்படுத்தினால் ஜனநாயக வழிக்குத் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையாவது, என்பதும் கேள்விக்குறிதான். பின்னணிகளைத்தீர்மானிக்காது 6 அல்லது 7 தமிழ் சஞ்சிகைகளில் எழுதப்படுபவையினால் ஜனநாயக மாற்றங்கள் உருவாகும் என எண்ணுவது குழந்தைத்தனமாகும். இது எப்படி என்றால் சிங்கத்திடம் சென்று, விலங்குகளைத் தின்பது பாவம், அதனால் மோட்சமும் அடைய முடியாது. ஆதலால் மரக்கறிக— ளைப் புசிக்கப் பழகவும் எனக் கேட்பதைப் போன்றதுதான்.

எல்லைப் புறங்களில் அப்பாவிச் சிங்கள மக்களைக்கொன்று குவிப்பதைக் கருத்தில்கொள்ளாமல், குடியேற்றங்களை அனுமதிக்காத, விட்டுக் கொடுக்காத தன்மையின் சிறப்பம்சங்களும் ஆராயப்படுகின்றன. அரசுடன் சலுகைகளுக்காக கை கோர்த்ததும், இந்திய இராணுவத்தை

வரவழைத்ததும், இன்னும் திரை மறைவில் நிகழும் பல சம்பவங்களும், சுதுமலைப் பிரகடனமும், அரசினதோ, இந்தியாவினதோ ஆதிக்கத்தை அனுமதிக்காத தன்மையின் வெளிப்பாடா? புரியாமல் எல்லாம் இங்கே குழப்பபடுகின்றன. காலங்காலமாகவாழ்ந்த முஸ்லீம் மக்களுக்கு ஆயுத முனையில் கொடுக்கப்பட்ட தீர்வுக்கும் தத்துவங்கள் சொல்லப்படுகின்றன. ஆரோக்கியமான விவாதங்கள் புதியதொரு வழியை தெரிவுசெய்ய வைக்கும் எனப் பல குரல்கள் இங்கேயும் ஓங்கி ஒலிக்கத்தான் செய்கின்றன. ஆனால் பக்கச்சார்புகள் ஆரோக்கியமானவையல்ல.

இந்தக் கடிதத்தினை நிலைமைகளை ஆழமாக ஆராயாது சில சம்பவங்களின் துணையுடனான அலட்டல் என ஒதுக்கிவிட்டு மக்களின் விடுதலைக்காக சிந்திப்பதாகவும், எழுதுவதாகவும் விளக்கத்தூதுகள் மீண்டும் மீண்டும் அரங்கேறலாம். ஆனால் அடுத்த வினாடி என்ன நிகழும் என நிச்சயமற்றுப்போன இந்த பாழாய்ப்போன உலகில் மேடைகள்கூட உறுதியாக இல்லை என்பததான் யதார்த்தம்.

. . . . . . – டானியல்

யதார்த்தம் பல நேரங்களில் பயங்கரமானதும், ஜீரணிக்க முடியாததும்தான். இதற்காக நடப்பதெல்லாம் விதிப்படியேதான் என்றோ 'எல்லாம் அவன் செயல்' என்றோ இருந்துவிடமுடியாது.

– கடலோடிகள்

*

தொடர்ச்சியான வெளியீடுகளில் குறிப்பிட்ட சிலரின் ஆக்கங்களே வெளிவருகின்றன. கலம் 39இல் ப. வி. ஸ்ரீரங்கனது கருத்துகள் மீதான செல்லக்கண்டுவின் பார்வையில் "வாழ்வைத் தொலைத்தவர்களும், முடமாக்கப்பட்டிருப்பவர்களும் எண்ணக் குமுறல்களை வெளிப்படுத்தும் களமாக தூண்டில் இருப்பதால் தொடர்ந்தும் வெளிவரவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையிலேயே இப்படியிருந்தால் வரவேற்கத்தான் வேண்டும். ஆனால் எங்களால் சீர்திருத்தம் பற்றி எழுதமட்டுந்தான் முடியும், சொந்த வாழ்க்கையில் நத்தையைப்போல ஒடுங்கித்தான் வாழ்வோம் என்பதுபோல் நடப்பவர்களது ஆக்கங்கள்தானே பெருமளவு வெளிவருகிறது. இப்படியானவர்களது ஆக்கங்கள் வெளிவரும்போது தூண்டில் மீதல்லவா வெறுப்பு பரவுகிறது. ஆசிரியர்களால் இவர்களை இனங்கண்டு கொள்ள முடியாமலிருக்கலாம்.

உணர்வு, அறிவு ஆகிய இரண்டு வழிகளாலும் சிந்திப்பவர்களால்தான் நல்ல படைப்புகள் வழங்க முடியும். வெளியே சீர்திருத்தம், சமூக மாற்றம் என்ற வேஷம். உண்மையாக செயற்படமுடியாத கோழைகள். மற்

றவர்கள் தங்களைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும், தங்களது 'திறமைகளை' வெளிப்படுத்தவும் இவர்கள் தூண்டிலை உபயோகப்படுத்துகிறார்களோ என்று எண்ணுகின்றேன்.

தொடர்ச்சியான நோக்கில் தூண்டில் ஆசிரியர் குழுவினரது எண்ணக் கருத்துகளை பார்க்கும்போது உண்மையான ஓர் துடிப்பும், நல்நோக்கும் இருப்பது புரிகிறது. உண்மையை விரும்புபவர்களால் நடாத்தப்படும் இச் சஞ்சிகையில் வெறும் பாராட்டுகளை மட்டும் நேசிக்கின்ற கோழைகளது ஆக்கங்கள் வருவது மிகவும் வேதனையைத் தருகிறது.

பெண்விடுதலை, அது, இது. . . . என்று முழக்கமிட்டவர்களில் சிலர் எல்லாம் பொழுது — போக்குக்குத்தான் என்பதுபோல் நடக்கிறார்களே!" "தாலி என்பது பயங்கரமான விலங்கு" என்று கதறித் தீர்த்தவர்களில் சிலர் இன்று அந்த விலங்குதான் திருமணத்தின் புனிதச் சின்னமென துதித்து தங்களுக்குள் தாங்களே முடங்கிவிட்டார்களே! எவற்றையெல்லாமோ உடைத்தெறியவேண்டுமென்று அமைப்புகளை உருவாக்கி, கூட்டங்கள் கூட்டியவர்களில் சிலர் அந்தக் கட்டுப்பாடுகள்—தான் தமக்கு வாழ்வின் அடிப்படைகள் என்பதுபோல் நடப்பது மிகமிக வருந்தத்தக்கது. ஓர் வேண்டுகோள் இனிமேலாவது இவர்கள் எழுதுகோல்களைத் தூக்கிவீசிவிட்டு மௌனமாகவிருக்கவேண்டும்.

மனிதருக்குள்ள உண்மை—யான உணர்வுகளை ஒருவர் எழுத்தில் வடித்தால் அவை ஆபாசங்கள் எனக் கேவலப்படுத்தப்படுகின்றன. இதேவேளை எழுதுபவை சொந்த வாழ்வுக்கல்ல, வெறும் உபதேசங்கள்தான் என்பது போன்ற ஆக்கங்கள் நல்ல விடயங்கள் எனப் பாராட்டப்படுகின்றன. எழுத்தாளர்களும், வாசகர்களும் உண்மைகளை தெரிந்து செயற்படுவார்களா?

. . . . . — பானு.

தாங்கள் எழுதும் ஆக்கங்களுக்கும், வெளியிடும் கருத்துகளுக்கும் முரணாக தங்கள் சொந்த வாழ்வை நடைமுறையில் அமைத்துக்கொள்பவர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். உங்களால் அடையாளம் காணமுடிந்த இவர்களின் பெயர், விபரங்களை நேரடியாகக் குறிப்பிட்டு எழுதுவதன் மூலம் இவர்கள் அம்பலப்படுத்தப்படுவதுடன், இப்படியான தனிநபர்களின் நடத்தைகளினால் சரியான கருத்துகளும், சீரிய நோக்கங்களைக்கொண்ட அமைப்புகளும் மாசுபடுத்தப்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம். இப்படியாக இல்லாமல் 'எழுதுபவர்கள் எல்லாமே இப்படித்தான்" "கூட்டங்கள், அமைப்புகள் எல்லாம் இப்பிடித்தான்" என்று வெறுமனே ஒட்டுமொத்தமாக புறக்கணிப்பைச் செய்வது சரியான அணுகுமுறையாகாது.

— கடலோடிகள்

---

பின்னட்டை அறிவித்தல்

மாட்டின் லூதர் கிங்


---

# போராட்ட ஐக்கியம்.

ஒடுக்கப்படும் மக்கள் பெரும்பான்மையினராயும், ஒடுக்குவோர் சிறுபான்மையினராயும் உள்ளனர். ஒடுக்கப்படுவோரால் ஏன் தம்மை ஒடுக்குவோரைத் தூக்கி எறிய முடியவில்லை? இந்தக் கேள்வி நாட்டுக்கு நாடு, பிராந்தியத்திற்குப் பிராந்தியம் நம்மை எதிர் நோக்குகிறது.

ஒடுக்கப்பட்ட மக்கள் ஐக்கியப்பட்டால் ஒடுக்குவோரைத் தூக்கியெறியவும் ஒடுக்குதலும் சுரண்டலும் இல்லாத உலகை உருவாக்கவும் அதிக நாட்கள் செல்லாவென்று ஒடுக்கப்படும் மக்கள் சார்பிற் போராடும் சகல சக்திகளும் கூறுகின்றன. பிரதான எதிரியை இனங்கண்டு தனிமைப்படுத்தி ஐக்கியப் படக்கூடிய சகல சக்திகளுடனும் இணைந்து போராடுவதன் தேவையும், சகல புரட்சிகர சக்திகளும் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளுகின்றன. சித்தாந்தத் தூய்மை பேசுவோர்கூட எப்போதுமே தம்மை மற்றவர்களிடமிருந்து பூரணமாகத் தனிமைப் படுத்திக்கொள்ள முனைவதில்லை. ஆயினும் எதிரிக்கு மாறான ஐக்கியம் அவசியமான சூழ்நிலைகளிலும் பிளவுகளும் சில்லறை மோதல்களும் மேன்மைக்கான போட்டியும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டச் சக்திகளைத் தம்மிடையே மோதவிடுகின்றன. பிரதான எதிரியிடமிருந்து தனிமைப்படுத்தப் படக்கூடியவர்களும் பிரதான எதிரியுடன் இணைந்து செயற்படும் நிலைமைகளை ஒடுக்கப்படும் மக்களின் போராட்டச் சக்திகளின் ஐக்கியமின்மை உருவாக்குகிறது. வெற்றி வாய்ப்புள்ள சூழ்நிலைகளிலுங்கூட எதிரியின் கையைப் பலப்படுத்தும் முறையில் ஐக்கிய முன்னணிகள் பிளவுபட்டுத் தோல்வியைத் தழுவியுள்ளன.

பிளவுகட்கும் ஐக்கியமின்மைக்கும் எதிரியின் சதிகள், ஊடுருவல் போன்ற புறக்காரணங்கள் பங்களிக்கலாம். ஆயினும் எல்லாப் பிரச்சனைகளையும் எதிரியின் தலைமீது சுமத்திவிடமுடியாது. ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டச் சக்திகளின் வெற்றி அவற்றின் ஆளுமைக்குட்பட்ட விஷயங்களிலேயே முக்கியமாகத் தங்கியுள்ளது. தங்களது பலத்தையும் பலவீனத்தையும் சரிவர அடையாளங் காண்பதும் குறுகியகால நலன்கட்கும் நீண்டகால நலன்கட்குமிடையில் வேறுபாடுகளைத் தெளிவாக்கிக் கொள்வதும் அவசியம். எந்தவிதமான போராட்டம் அவசியம் என்பதைச் சமகால நிலவரத்தினதும் நிலைமைகளின் பொதுவான விருத்திப் போக்கினதும் அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டும். குறுகியகால நலன்கள்



எந்தளவுக்கு நீண்டகால நலன்களைவிட முக்கியத்துவம் பெறமுடியும் என்பதும் உடனடியான சூழல் சார்ந்ததே. இத்தகைய முரண்பாடுகளில் ஒரு அம்சத்தை மட்டுமே வலியுறுத்தி மற்றதைப் புறக்கணிப்பது அதிதீவிரமான நிலைப்பாடுகட்கு வழிவகுக்காதவிடத்துச் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டுக்கோ சரணாகதியடையும் போக்குக்கோ வழிவகுக்கலாம். வரலாற்றில் இவற்றுக்குப் பல உதாரணங்கள் உண்டு. பிரதான முரண்பாட்டை அடையாளங்காணத் தவறுவது ஏற்படுத்தும் தீய விளைவுகளை அடையாளங் காட்டுவது எளிது. ஆயினும் பிரதான முரண்பாட்டை அடையாளங் கண்டும் நடைமுறையில் இரண்டாம் பட்சமான முரண்பாடுகளையே வலியுறுத்தும் போக்கும் சினேக முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாகக் கருதும் போக்கும் இன்றுவரை நம் மத்தியில் இருந்துவரும் முக்கியமான குறைபாடுகளாகும்.

அரசியற் கட்சிகள் போன்ற இறுக்கமான சித்தாந்த, ஸ்தாபன அமைப்புக்களையும் பரந்துபட்ட வெகுஜன இயக்கங்களையும் ஒரே விதமாக அணுகும் போக்கு மேற்கூறியவாறான தவறுகளை மேலும் தூண்டிவிடுகிறது. எக் காலத்துக்கும் எச் சூழ்நிலைக்கும் ஏற்ற, மாறாததும் நிரந்தரமானதுஞ் சரியானதுமான அறிவு தம்மிடமே உள்ளது என்று கருதுவோரே மிகவுந் தவறான முறையில் செயற்படுகின்றனர். தம்முடைய அறிவுக்கும் விளக்கங்கட்கும் அப்பாற்பட்டு உண்மைகள் இல்லை என்று கருதும் தனிநபர்களும் ஸ்தாபனங்களும் உண்மையினின்றும் அதன் தோற்றுவாயான நடைமுறையினின்றும் வெகுவேகமாகவே ஒதுங்கி விடுகின்றன. எவ்வளவு தீர்க்கமான அறிவுடைய மனிதராயினும் அரசியல் ஸ்தாபனமாயினும் அந்த அறிவை நடைமுறையில் பிரயோகிக்காமல் மேலும் விருத்தி செய்யமுடியாது. அறிவு நடைமுறையிற் பிரயோகமாகும் போது தவறுகள் புலனாகின்றன. தவறுகளை ஆராய்வதன்மூலம் சரியானவை அடையாளங் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட கொள்கை நடைமுறைப் படுத்தப்படும் போது எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகள் நேருமாயின் கொள்கை தவறு என்று நிராகரிப்பது சூடு கண்ட பூனையின் போக்கு. சுடுதணலிற் படுக்கப்போய் சூடுகண்ட பூனை சுடாத அடுப்பையும் நெருங்காதது போன்று தவற்றுக்கான காரணத்தைச் சரிவர ஆராயாமல் எதையும் பூரணமாக நிராகரிப்பது அனுபவத்திலிருந்து பிழையாகக் கற்பதாகும். சூடே படவில்லை என்று பாசாங்கு செய்வது அனுபவத்தை மறுக்கும் தவறாகும். போராட்டங்கட்கு இரண்டு வகையான போக்குகளும் தீங்கானவை.


ஐக்கிய முன்னணியைப் பற்றிப் பேசும்போது சிலருக்கு யாருடன் ஐக்கியப்படலாம் என்பதைவிட யாருடன் ஐக்கியப்படக்கூடாது என்ற விஷயமே முக்கியமாகிறது. வேறு சிலருக்குப் போராட்டத்தின் நோக்கத்தைவிட ஐக்கியமே முக்கியமானதாகத் தெரிகிறது. ஐக்கிய முன்னணியின் இயல்பை நாம் பல கோணங்களினின்றும் அணுக வேண்டும். ஒரு ஐக்கிய முன்னணி அதன் ஒரு பகுதியினரின் நலன்களைப் பேணும் நோக்குடன் மட்டுமே அமைவதாக இருப்பின் அது ஐக்கிய முன்னணி அல்ல. ஐக்கியத்துக்காக அதன் எந்த ஒரு பகுதியும் தன் நீண்டகால நோக்கங்களைத் துறக்க வேண்டுமாயின் ஐக்கிய முன்னணியில் நேர்மையான உறவுகட்கு இடமில்லை. 'நோக்கங்கள் மார்க்கங்களை நியாயப்படுத்துகின்றன' என்றவாறு மற்றவர்கள் முதுகிற் சவாரிசெய்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற உதவும்

கருவியாக ஐக்கிய முன்னணியை அதன் எந்தவொரு பகுதியினருங் கருதுவார்களாயின் அவர்கள் ஐக்கிய முன்னணியின் பிளவுக்கும் தோல்விக்குமே வித்திடுவார்கள். ஐக்கிய முன்னணிகள் குறுகிய காலத் தேவைகளையொட்டி உருவாக்கப்படும் அமைப்புகள். அவற்றின் உறுப்பினர்களது நீண்டகால நோக்கங்கள் வேறுபடுவன. இதுபற்றி எவரும் எவரையும் ஏமாற்றும் தேவை இல்லை. நேர்மையான உறவின் அடிப்படையிலான ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் மத்தியிலான ஒத்துழைப்பு ஐக்கிய முன்னணியின் போராட்டத்தின் நோக்கம் நிறைவேறிய பின்னரும் தொடரமுடியும். இத் தொடர்ச்சியின் தன்மையும் முனைப்பும் போராட்டத்தின் போக்கிற் தீர்மானிக்கப் படுகின்றன.

ஐக்கிய முன்னணியை 'வர்க்க சமரசம்' என்று நிராகரிப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் வரட்டு மாக்ஸியவாதிகளே. 'பாட்டாளி வர்க்கத்தின் தலைமையும் கூலி விவசாயிகளின் ஆதரவும்' என்ற சூத்திரத்தைவிட எந்தவிதமான போராட்ட ஐக்கியத்தையும் ஏற்கத் தயங்கும் இவர்கட்குப் பாட்டாளிகளையும் விவசாயிகளையும் ஐக்கியப்படுத்தும் திறமையும் இல்லை, பாட்டாளிகளை மட்டுமேனும் ஐக்கியமாகச் செயற்பட வழிகாட்டும் அறிவும் இல்லை. கிளிப்பிள்ளைகள் போன்று, மாக்ஸியச் சூத்திரங்களை, ஆராய்வும் ஆழ்ந்த சிந்தனையும் இல்லாமல், உச்சரிக்கின்ற இவர்கள் தங்களை மக்களிடமிருந்து தனிமைப் படுத்திக் கொள்கிறார்கள். எவ்வாறாயினும் இவர்களில் ஒரு பகுதியினர் போராட்டத்தின் விருத்தியின் போக்கில் ஐக்கிய முன்னணியின் தேவையை உணர்ந்து தமது ஒத்துழைப்பை வழங்க இடமுண்டு.

நமது கூடிய கவனத்துக்குரியவை ஐக்கிய முன்னணியை நிராகரிப்பவர்களின் நிலைப்பாடுகளன்றி அதை ஏற்பவர்களின் நிலைப்பாடுகளும் அவை எழுப்பும் கேள்விகளுமே. யாருடன் எதற்கான ஐக்கியம், யார் நண்பர், யார் பகைவர் என்பன மிகவும் அடிப்படையான கேள்விகள். எந்த உறவுகள் நிலைக்கக்கூடியவை, எந்த உறவுகள் நிச்சயமற்றவை என்பனபற்றி முன்கூட்டியே உத்தரவாதம் இல்லையாயினும், வர்க்க அடிப்படையிலான போராட்டத்தில், பூரண ஒடுக்கலுக்கு உட்படும் வர்க்கங்களிடையிலான உறவு மிகவும் நெருக்கமான ஒன்று எனலாம். இந்த வர்க்கங்கட்கும் சரண்டல் முறையின் கீழ் வேறுபடும் அளவுகளில் நலன் பெறுவதாகத் தம்மைக் கருதும் வர்க்கங்கட்குமிடையில் உள்ள உறவு நிபந்தனைக்குட்பட்டதும் குறுகியகால அடிப்படையில் அமைந்ததுமாகும்.

ஒரு சமுதாயத்தின் குறிப்பிட்டதொரு வரலாற்றுக் காலகட்டத்தில் பலவேறு வர்க்க நலன்களும் அந்த நலன் சார்ந்த பல அரசியல் முனைப்புக்களும் இயக்கங்களும் செயற்படும்போது ஒவ்வொரு இயக்கமும், அரசியல் முனைப்பும் எவ்வாறு தன்னுடைய வர்க்கநலன்களைத் தனது அரசியற் பார்வைக்கேற்ப முன்னோக்கி உந்த முடியும் என்று கணித்தே காரியத்தில் இறங்குகிறது. எப்போதும் ஐக்கிய முன்னணிகள் காலத்தின் தேவை கருதியே உருவாக்கப்படுகின்றன. ஐக்கிய முன்னணி முழுக்க முழுக்கப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காகவே உருவாக்கப்படுகிற ஒன்றாயின் அதில் மற்ற வர்க்கங்கள் பங்குகொள்ளத் தயங்குவதுதான் இயல்பு. ஒரு ஐக்கிய முன்னணியின் தன்மை அது உருவாகும் அரசியற் சூழ்நிலையைப் பொறுத்தது. அதில் பங்குபற்றும் ஒவ்வொரு வர்க்கமும் அரசியல் இயக்கமும் அதில்




முதன்மை வகிக்கவும் போராட்டத்தின் போக்கை நிர்ணயிக்கவும் முனைவது எதிர்பார்க்கக் கூடியதே. தெளிவான நோக்கமற்ற சந்தர்ப்பவாதக் கூட்டுக்களாக அமையும் ஐக்கிய முன்னணிகளில் இத்தகைய முனைப்புகள் எளிதாகவே மோதல்களாகவும் பகை முரண்பாடுகளாகவும் விருத்தியடையக்கூடும். எனவேதான் ஐக்கியமுன்னணியின் தன்மையும் அதன் போராட்ட இலக்கும் பற்றிய விடயங்கள் தெளிவாகவும் பகிரங்கமாகவும் இருப்பது அவசியம். ஒரு பங்காளி மற்றவரை ஏமாற்றும் நோக்குடன் அமைக்கும் கூட்டணிகள் பங்குபற்றும் எவருக்கும் நன்மை தரமாட்டா.

நீண்டகால இலட்சியத்தைக் கைவிடாது குறுகிய காலத்திற் சாதிக்கவேண்டிய ஒரு பணியைப் பற்றிய உடன்பாடு காரணமாக உருவாகும் ஒரு ஐக்கிய முன்னணியிற் பங்குபற்றும் ஒவ்வொரு அரசியற் சக்தியும் தன் அரசியற் பார்வையே நீண்டகால நோக்கில் நிலைத்து ஆதிக்கஞ் செலுத்தும் என்ற நம்பிக்கையுடனேயே மற்றவர்களுடன் இணைய முன்வருகின்றது. போராட்டத்தின் போக்கிற் சரியான வரலாற்றுப் பார்வையுடைய முற்போக்குச் சக்தியே வெல்லும் என்ற அடிப்படையிலேயே பாட்டாளி வர்க்க இயக்கங்கள் ஐக்கியமுன்னணியிற் பங்குபற்றுகின்றன. ஐக்கியமுன்னணியிற் பங்குபற்றிப் போராடும் போக்கிற் தவறுகள் திருத்தப்படவும் சரியான நீண்டகாலப் பார்வையை பரந்துபட்ட மக்களது உடனடியான நலன்களுடன் இணைத்துச் செயற்படும் சக்திகள் வலிமை பெறவும் இயலுமாகிறது. போராட்டத்தின் போக்கில் ஐக்கிய முன்னணியினுள் உள்ள உறவுகளின் தன்மையிலும் மாற்றம் நேருகின்றது. ஒரு ஐக்கிய முன்னணி ஈற்றில் யாருடைய நலனைப் பேணுகிறது என்பது அதிற் பங்குபற்றும் சக்திகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஒட்டியே முடிவாகின்றது. சுரண்டப்படும் வர்க்கங்களின் பிரதிநிதிகட்கும் சுரண்டல் முறையை அனுமதிக்கும் வர்க்கங்களின் பிரதிநிதிகட்குமிடையிலான உறவில் ஐக்கியம் நிபந்தனைக்குட்பட்டது. அவர்கட்கிடையிலான போராட்டமும் உடனடியான சூழ்நிலைகளால் வரையறைக்குட்படுகிறது. ஐக்கியம், போராட்டம் ஆகிய இரண்டில் எதையேனும் மிகையாக வலியுறுத்தும் பாட்டாளி வர்க்கத் தலைமை ஐக்கிய முன்னணியைத் தவறாக உபயோகிக்கிறது.

பலமான ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியும், அதன் பின்னால் ஒரு வலிய வெகுஜன இயக்கமும் இருக்கும் நிலையில் பாட்டாளி வர்க்க நலன்களை விட்டுக் கொடுக்காமலே போராட்ட ஐக்கியத்தை வலியுறுத்துவது சிரமமற்றது. பாட்டாளி வர்க்க இயக்கம் பலவீனமாக உள்ள நிலையில் நேச சக்திகளுடன் போராட்டத்திற்கும் ஐக்கியத்திற்குமிடையிற் சரியானதொரு சமநிலையைப் பேணுவது சிக்கலானது. எவ்வாறாயினும் தவறுகள் பாட்டாளி வர்க்கம் தனிமைப்படுத்தப் படவோ அன்றிச் சரணாகதியடையவோ காரணமாகலாம். அண்மைக்கால வரலாற்றில் இருவகையான தவறுகட்கும் உதாரணங்களைக் காணமுடியும்.

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில் இடது தீவிர, வலது சந்தர்ப்பவாதத் தவறுகள் பல சூழ்நிலைகளிலும் இழைக்கப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் தீவிர இடதுசாரி நிலைப்பாட்டை வலியுறுத்தித் தேசிய முதலாளித்துவத்தையும் எதிரி என்று நிராகரித்த சமசமாஜக் கட்சியினர் பின்னர் அதே தேசிய முதலாளித்துவத்தின் நிழலை நாடியதை அறிவோம். ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் யூ.என்.பிக்கும் உள்ள வேறுபாடு பற்றிய விவாதங்கள் இன்றுவரை தொடர்கின்றன. தேசிய முதலாளித்துவத்தின் கட்சியாகக் கருதப்பட்டுவரும் ஸ்ரீ.ல.சு.க. எவ்வாறு யூ.என்.பி.யினின்றும் வேறுபடுகிறது என்பதையும் அதனுடன் இடதுசாரிக் கட்சிகள் ஐக்கிய முன்னணியை எந்த அடிப்படையில் அமைத்திருக்க வேண்டும் என்பதையும் இன்றைய நிலையில் ஸ்ரீ.ல.சு.கட்சியுடனான ஐக்கியம் எவ்வாறு அமையக்கூடும் என்பதையும் ஆராய்வதன்மூலம் கடந்தகாலத் தவறுகளை விமர்சித்து எதிர்காலத்திற்கான ஒரு சரியான பார்வையை விருத்தி செய்ய இடமுண்டு. இதேபோன்று ஜே.வி.பி. பற்றியும் முக்கிய தமிழர் விடுதலை இயக்கங்கள் பற்றியும் தெளிவான பார்வையை விருத்திசெய்வது அவசியம்.

(தொடரும்)

•

சி. சிவசேகரம்

"இலங்கையிலை என்ன நடந்தாலும் அதைப் பற்றி அக்கறைப்படாதவர் இண்டைக்கு அதிசமாய் அங்கத்தையப் பிரச்சினையளைப் பற்றி விசாரிக்கிறார். அதிசமாயிருக்கு"

"இஞ்சயிருந்த தமிழாக்களைத் திருப்பி இலங்கைக்கு அனுப்பப்போறதாய் கதை அடிபடுகுது"



தமிழ் நாட்டில் பிரச்சாரம் செய்ய வந்தபோது ராஜீவ்காந்தி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். இக் கொலையைக் கண்டித்துப் பலர் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். பல உலகநாட்டுத் தலைவர்கள் மரணச் சடங்கில் கலந்து கொண்டு கௌரவித்துள்ளனர்.

இக் கொலையைப் புலிகளே செய்திருக்க முடியும் என்ற பிரச்சாரம் இந்தியாவிலும், உலக நாடுகளிலும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் அவற்றை இன்னும் வெளியிடக் காணோம்.

இப் பிரச்சாரத்தின் எதிரொலியாக இந்தியாவில் அகதி முகாம்களிலுள்ள ஈழ அகதிகள் காடையர்களால் தாக்கப்பட்டு வருகிறார்கள். பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. முகாம்களிலும், தனியாகவும் இருந்த பல ஈழ மக்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை. இந்தியாவின் எந்த ஒரு மூலையிலும் ஒரு ஈழத் தமிழர் கூட இருக்கக் கூடாதென்று இந்திரா கொங்கிரசினரும், அ.தி.மு.க. வினரும் ஏனைய ஓட்டுக் கட்சிகளும் துவேசத்தைக் கிளப்பி வருகின்றனர். தமது அரசியல் பிழைப்பையும் இதில் நடத்திக்கொள்கின்றனர்.

ராஜீவைக் கொலை செய்வதற்குப் பலர் பல காரணங்கள் வைத்திருக்கிறார்கள். இந்திரா கொலையையடுத்து சீக்கிய மக்கள் நாடு முழுவதிலும் ஆயிரக்

கணக்கில் கொல்லப்பட்டமை, பஞ்சாப்பில் இராணுவப் பயங்கரவாதம் மக்கள்மீது ஏவிவிடப்பட்டமை, அஸாம் மாணவர் எழுச்சியை அடக்க இராணுவத்தை ஏவி வன்முறையைக் கட்டவிழ்த்து வருகின்றமை, காஷ்மீரில் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து போராளிகளையும், மக்களையும் கொன்று வருகின்றமை, ஏகாதிபத்திய– நாடுகளின் தொழிற்சாலைகளுக்கு இந்தியாவில் இடம் கொடுத்து தரகு பெற்றுக் – கொள்வதன் மூலம் போபாலில் ஏற்பட்ட விசவாயுக் கசிவில் ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதுடன், அம் மக்களின் பரம்பரையே முடக்கப்பட்டிருப்பது, இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இரு அரசுகளுக்கும் சாதகமான தீர்வை வலுக்கட்டாயமாகத் திணித்தது, இந்திய இராணுவம் மூலம் தமிழ் மக்களையும், போராளிகளையும் கொன்றொழித்தமை, ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சிதைத்ததில் பங்கெடுத்துக் கொண்டமை..... இப்படி ராஜீவ் தலைமையால் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் பதில் தேடுவது தவறல்ல— இப்படியான கொலைதான் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்றில்லாவிடினும்!

ராஜீவின் கொலைக்குப் பின்னணியில் ஏகாதிபத்தியங்கள் இருப்பதாகவே ஊகிக்கப்படுகிறது. தமது நண்பராக இருந்தாலும், மத்திய கிழக்குப் பிரதேசத்தில் பிராந்திய வல்லரசாக சதாம் குசேன் முயற்சித்தபோது பொறுக்க முடியாமல் அவருக்கு எதிராகப் போர் செய்த ஏகாதிபத்தியங்கள் அதே வேலையை வேறுவழிகளில் இந்தியாவுக்கு எதிராக மேற்கொள்ளலாம் என்பதற்கு காரணமில்லாமல் இல்லை. பாகிஸ்தானைவிட பல மடங்கு மேம்பட்ட இராணுவ வளர்ச்சி, இலங்கை ஆக்கிரமிப்பு, மாலைதீவு ஆக்கிரமிப்பு, பங்களாதேஷ், நேபாளை பொருளாதார நெருக்கடிகள் மூலம் அடிபணியவைக்க முயலுதல்... போன்றன தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு வல்லரசாக தோற்றம் பெற்று வருவதைக் காட்டி வருகின்றன. ராஜீவ் தமக்கு முழு விரோதியாக இல்லாவிடினும், இந்தியாவின் வல்லரசுத் தோற்றம் தமக்கு ஏற்புடையதாக இல்லாததால் புலிகளையோ அல்லது வேறு குழுக்களையோ பாவித்து ஏகாதிபத்திய நாடுகள் இக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்றே கருத முடிகிறது. வெள்ள நிவாரணம் என்ற பெயரில் அமெரிக்க இராணுவமும், ஆயுதத் தளபாடங்களும் பங்களாதேஷில் குவிக்கப்பட்டிருப்பது கவனிக்க வேண்டியதொன்று. ஏகாதிபத்தியங்கள் குறித்து மக்கள் இன்னும் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதை இக் கொலை காட்டுகிறது.

தமிழ் நாட்டில் ராஜீவ் கொலை செய்யப்பட்டதை வைத்து ஈழத் தமிழர்களுக்கு கிடைக்கும் இந்திய மக்களின் தார்மீக ஆதரவை இல்லாமல் செய்வதிலேயே இந்திய வோட்டுக் கட்சிகள் முயற்சித்து வருகின்றன. ஈழத் தமிழர்களுக்கான உண்மை அமைப்பெதவும் இன்றில்லாததால் இக் கட்சிகளின் முயற்சி பலிக்கக் கூடும். இது ஈழத் தமிழருக்கு ஓரளவு பாதகமான அம்சமே.

எனினும் ராஜீவின் கொலைக்கு சீக்கிய மக்களோ, அஸாம் மக்களோ காஷ்மீர் மக்களோ, போபால் மக்களோ, ஈழத் தமிழ் மக்களோ, இன்னும் ராஜீவின் அரசியலால் பாதிக்கப்பட்ட மக்களோ கவலைப்படப் போவதில்லை.

# தூண்டில்

ஜூன் 1991

இலம்: 42


ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
F . R . G

தொலைபேசி: (0231)136633
(புதன் கிழமைகளில்
14-20மணி வரை)

சந்தா:

ஜேர்மனி : 6 மாதங்கள் - 20,-டி.எம்
1 வருடம் - 38,-டி.எம்

ஐரோப்பா : 6 மாதங்கள் - 25,-டி.எம்
1 வருடம் - 48,-டி.எம்

அமெரிக்கா,
ஆபிரிக்கா,
ஆசியா : 1 வருடம் - 65,-டி.எம்

அவுஸ்ரேலியா: 1 வருடம் - 75,-டி.எம்

தபாற்கணக்கு
இல: 30807468
Postscheckamt Dortmund
BLZ 44010046


சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்பி வைப்பதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

உங்கள் கருத்துகள், விமர்சனங்களுடன் எங்களுடையதும், உங்களுடையதுமான முயற்சிகளை பயனுள்ளதாக்குவோம்.

# அறிவித்தல்

நாம் இந்த தலைமுறையில்
வருந்தவேண்டியிருக்கிறது.
கொடியவர்களினது
ஈனச்செயல்களுக்காக மட்டுமல்ல
அதற்குமேலாக
நல்லவர்களினது பயங்கர
மௌனத்திற்காகவே!